விச்வாவஸு ஹு தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2026

மலர்: 8
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்





MONTHLY NEWSLETTER FROM:

## SRI VEDANTHA DESIKAR DEVASTHANAM

MYLAPORE, CHENNAI, Tel: 044 - 24953799, 044 - 43863747
Email: svdd.mylai@gmail.com Web: www.svdd.com





ஸ்ரீ:

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவாய நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:



# ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்

4, கேசவப்பெருமாள் சன்னிதி தெரு,மயிலாப்பூர், சென்னை-600 004
☎2495 3799 / 4386 3747 ★ Email:svdd.mylai@gmail.com ★ Website: www.svdd.com

### மாணவ, மாணவியர்களின் கல்வி மேன்மைக்காக

## ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவர் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை

### 08.02.2026 - ஞாயிற்றுக்கிழமை

ஞானாநந்த மயம் தேவம் நிர்மல ஸ்படிகாக்ருதிம் ।
ஆதாரம் ஸர்வ வித்யாநாம் ஹயக்ரீவமுபாஸ்மஹே ॥

ஹயக்ரீவ ஹயக்ரீவ ஹயக்ரீவேதீயோ வதேத் ।
தஸ்ய நிஸ்ஸரதோ வாணீ ஜஹ்நு கன்யா ப்ரவாஹவத் ॥

ஶ்ரிய: பதியான ஸர்வேஸ்வரன் சேதநர்களை உஜ்ஜீவிப்பதற்காக பல அவதாரங்களை செய்து வருகின்றான். அவற்றுள் ராம கிருஷ்ணாதி விபவ அவதாரங்களை இதிஹாஸ புராணங்களான ஸ்ரீமத் ராமாயணமும், மஹாபாரதமும் புகழ்கின்றன. இவ்வவதாரங்களுக்கு முன்னதாகவே வேதம், ஞானம், அறிவு அழியாமல் இருக்க அருள்புரிய தோன்றிய அவதாரம் ஸ்ரீ ஹயக்ரீவ அவதாரம். அந்த லக்ஷ்மீ ஹயக்ரீவன் நான்கு வேத ஸ்வரூபமே. அப்படிப்பட்ட ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவன் நம் மாடமாமயிலையில் ஆஸ்திகர்களை அநுக்ரஹிப்பதற்காகவும், ஞானம், அறிவு, வாக்கு, வித்யை இவையெல்லாம் அளித்து நம்மை அநுக்ரஹிப்பதற்காகவும் கோயில் கொண்டுள்ளான். ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுக்கு ஆஸ்தீகர்களின் வேண்டுகோளுக்கிணங்க நாளது விஸ்வாவஸு வருஷம் தை மாதம் 24ம் தேதி (07.02.2026) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு விசேஷ திருமஞ்ஜனமும், தை மாதம் 25ம் தேதி (08.02.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணி முதல் வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனையும் அதிவிமர்சையாக நடைபெற உள்ளது.

ஆஸ்திகர்கள் இந்த விசேஷமான உத்ஸவத்தில் அன்வயித்து ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவனுடையவும், ஸ்வாமி தேசிகனுடையவும் அருளினால் ஞான ஐஸ்வர்யாதி சௌபாக்யங்களைப் பெறவேண்டுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

### நிகழ்ச்சி நிரல்

| | | |
|---|---|---|
| 07.02.2026 (சனி) காலை 10:00 மணி | - | விசேஷ திருமஞ்சனம் |
| 08.02.2026 (ஞாயிறு) காலை 08:00 மணி | - | வித்யா அபிவ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை (காலை 08:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம் ; மாலை 04:00 மணிக்கு அர்ச்சனை ஆரம்பம்) |

**ஸங்கல்ப அர்ச்சனை நன்கொடை – ரூ. 300/–**

R. அனந்த பத்மநாபன், R. முகுந்தன், L.N. ஸ்ரீனிவாசன் - தர்மகர்த்தாக்கள்

சுபம்

விச்வாவஸு ஹு தை மீ
ஜனவரி - பிப்ரவரி 2026

ஸ்ரீ:

மலர்: 8
இதழ்: 10

ஸ்ரீ அலர்மேல்மங்கா நாயிகா ஸமேத ஸ்ரீ ஸ்ரீநிவாஸ பரப்ரஹ்மணே நம:
ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

# தேஶிக ஸந்தேஶம்

## திருக்கோவில் பூஜா காலங்கள் *

### காலை

| ஞாயிறு முதல் புதன் வரை | | | வியாழன் முதல் சனி வரை | | |
|---|---|---|---|---|---|
| 6.30 | - | விச்வரூபம் | 6.00 | - | விச்வரூபம் |
| 8.30 | - | திருவாராதனம் | 7.30 | - | பொது தரிசனம் |
| 9.45 | - | சாற்றுமுறை | | | |

12.00 - உச்சிகாலம்

### மாலை

4.00 - ஸந்நிதி திறப்பு, 7.30 - திருவாராதனம், 9.00 - சயனம்

* விசேஷ காலங்களில் மாறுதலுக்கு உட்பட்டது

**தர்மகர்த்தாக்கள்:**
ஸ்ரீ R. அனந்தபத்மநாபன் | ஸ்ரீ R. முகுந்தன் | ஸ்ரீ L.N. ஸ்ரீநிவாஸன்

**Editorial Board :**
ஸ்ரீ நெல்வாய் ஸௌம்யநாராயணாசார்யர் ஸ்வாமி - ஆசிரியர்
ஸ்ரீ நாட்டேரி ஸ்ரீஹரி (எ) லக்ஷ்மீந்ருஸிம்ஹாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ நாவல்பாக்கம் ரங்கநாதாசார்யர் ஸ்வாமி
ஸ்ரீ ஸ்ரீபெரும்பூதூர் ஸத்யநாராயணாசார்யர் ஸ்வாமி

**Photo Courtesy:** P.S. Anand & Thillai Ranganathan
Published by: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை-4
Printed by: Abisan Enterprises Chennai & 87, Cell : 95000 45604
Designed by: ye**SK**ay designs



**ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம்**
மயிலாப்பூர், சென்னை - 600004. போன்: 044 - 24953799, 43863747
Website: www.svdd.com Email: svdd.mylai@gmail.com



ஸ்ரீ:

# ஆசிரியர் விண்ணப்பம்

வேங்கடாத்3ரி ஸமம் ஸ்தா2நம் ப்3ரஹ்மாண்டே3 நாஸ்தி கிஞ்சந |
வேங்கடேஶ ஸமோ தே3வோ ந பூ4தோ ந ப4விஷ்யதி ||

வேங்கடத்தைப் பதியாக வாழ்வீர்காள்!

இருள்தரு மாஞாலத்துள் இருக்கும் ஸம்ஸாரிகளுக்கு சாஸ்த்ரமாகிய கைவிளக்கைக் கொண்டே காலத்தைக் கழிக்க வேண்டும் என்று கவிதார்கிக ஸிம்ஹமான நம் ஆசார்ய ஸார்வபௌமரின் நிலைப்பாடு. அந்த சாஸ்த்ரத்தின் அடிபடையில் பரம கருணையுடன் அவர் ஸாதித்தருளிய **ஸ்ரீ வைஷ்ணவ தினசரி** என்னும் க்ரந்தத்தில் ஒவ்வொரு வைஷ்ணவனும் அபிகமன காலத்தில் அநுஷ்டிக்க வேண்டிய கர்மங்களை சென்ற இதழில் முதல் பாசுரத்தில் தெரிவிக்கப்பட்டது.

பாகவதர்கள், தம்முடைய கர்மத்தின்படி இதுகாறும் வீணே கழிந்த நிலை முழுதையும் நினைந்து மனமுருகி, தேறி, பின் அன்று முழுதும் செய்யும் கைங்கர்யம் தடைபடாது நடந்து ஆநந்தம் பெறுவதற்காக மனத்திற்கு மகிழ்வைத் தரும் வேதமார்கத்தைக் கொண்டு மனம், வாக்கு, தேஹம் ஆகிய முக்கரணங்களாலும் பேரருளாளனுடைய திருவடியிரண்டையும் அன்பினால் சரணமடைவர். இங்ஙனம் செய்தலே அபிகமநம் எனப்படும்.

மிகவும் தாழ்ந்ததான இந்த்ரியங்கள் ஓடுவதற்குரிய வழியை அடைத்து ஸத்விஷய மார்க்கத்தைத் திறந்துவிட்டு ஜ்ஞானமாகிய விளக்கினை ப்ரகாசிக்கச் செய்து எலும்பு வீடாகிய சரீரம் சிதிலமாய் நெஞ்சுருகி உள் கனிந்து எழுந்ததான அன்பினால் அல்லாது திருவாழியை சுமக்கும் எம்பெருமானை அடையமுடியாது என்று **திருமழிசைப்பிரானும்** பரமனை அடையும் வழியை காண்பித்தார்.

ஹஸ்திகிரி நாதனே! கருமுகில் போன்றவனாய் மைவண்ண நறுங்குஞ்சிக் குழலையுடையனாய் திருவனந்தாழ்வான் மீது பள்ளிகொள்பவனாய் தாமரைப் போன்ற திருக்கைகளையும், திருவடிகளையும் உடையவனாய் தாமரைப்போன்ற திருக்கண்களையுடையனான உன்னை எப்போதும் **காவிபோல் வண்ணர் வந்து என் கண்ணுளே தோன்றினாரே** என்னும்படி கண்ணுள் நின்றகலாது அடியேனுக்கு அருள வேணுமென்கிறார் **கூரத்தாழ்வான்** தம்முடைய வரதராஜ ஸ்தவத்தில்.

இந்தத் தைப் பொங்கலில் அனைத்து தேசிக அடியார்களும் திவ்ய தம்பதிகளின் அருளைப்பெற விழைகிறோம். இந்தத் தைத்திங்களில் நம் ஸந்நிதியில் ஸங்க்ராந்தி உத்ஸவம் தொடங்கி, பரிவேட்டை, வனபோஜன உத்ஸவம் மற்றும் திருமழிசையாழ்வார், கூரத்தாழ்வான் உத்ஸவம் ஆகியவை கொண்டாடப்படவுள்ளது.

மார்கழி மாதத்தில் நடந்தேறிய அத்யயன உத்ஸவம், வைகுண்ட ஏகாதசி, ஆழ்வார் திருவடிதொழல், போன்ற உத்ஸவ படங்களுடன், அத்புதமான ஸம்ப்ரதாய கட்டுரைகளுடன் தை மாத தேசிக ஸந்தேசம் உங்கள் கரங்களில்.

ஸ்ரீ:

# Thai Vaibhavam

## FROM THE DESK OF TRUSTEES

The sacred month of Margazhi, beloved to Sriman Narayana and revered by all Sri Vaishnavas, was observed with great spiritual fervour, traditional discipline, and enthusiastic participation at our Sri Vedantha Desikar Devasthanam. This holy month —renowned for deep bhakti, kainkaryam, and the devotional experience (anubhavam) of the Divya Prabandham — witnessed several significant utsavams and religious observances, greatly enriching the spiritual lives of the devotees.

The **Pagalpathu and Irapathu** utsavams were conducted grandly yet traditionally, marked by the recitation of the Nalayira Divya Prabandham in strict accordance with sampradaya. These 22-day festivals symbolise the soul's journey toward Paramapadam, representing the culmination of bhakti, prapatti, and divine grace. Devotees were blessed with the darshan of the Lord in various sacred alankarams, accompanied by soul-stirring goshti recitations.

The most auspicious **Vaikunda Ekadasi** was celebrated with deep devotion and grandeur. The opening of the Vaikunda Dwaram symbolised the spiritual liberation bestowed by the Lord upon those who surrender to Him. Thousands participated in the early morning rituals, experiencing profound spiritual upliftment. The day's observances beautifully reflected Vaikunda Ekadasi's significance as the gateway to Moksha. Special mention must be made of the **100 Thada (Silver Cups) 'Koodarai vellum' utsavam,** which was celebrated on a grand scale.

The **Andal Neeratta Utsavam,** commemorating Sri Andal's divine observances during Margazhi, was celebrated with traditional rituals that highlighted her unwavering bhakti and devotion. The festival culminated in the Bhogi Thirukalyanam — a grand and joyous celebration of the divine wedding festivities as Margazhi drew to a close, symbolising prosperity, renewal, and divine grace.

**Promotion of Music and Cultural Kainkaryam**

In addition to religious observances, the Devasthanam remains committed to promoting classical music as a form of Bhagavad Aradhana. A **10-day Nadaswara Innisai programme** was successfully organised during Margazhi, featuring eminent vidwans whose soul-stirring performances created a truly divine atmosphere.

Furthermore, **'Paddhathi', the Annual Music Festival** at Desika Bhavanam — conducted over 20 days in association with Carnatica and Sri Parthasarathy Swamy Sabha — received an overwhelming response. Renowned artists and emerging talents alike participated, making it a genuine confluence of tradition, culture and devotion.

**Upcoming Utsavams**

The Devasthanam looks forward to the sacred Thai month, which will feature several important utsavams:

- Sankranti (Pongal) Utsavam, celebrating gratitude and abundance
- Kanu and Pari Vettai, symbolising divine sport and cosmic balance
- Vana Bhojanam Utsavam
- Sri Hayagreevar Sankalpa Archanai — specially organised for students, invoking the blessings of Lord Hayagreeva for knowledge, clarity, and success in examinations

It is by the grace of Sri Vedantha Desikan and the Divya Dampathis, the blessings of our Acharyas, and the steadfast support of devotees and kainkaryaparas that the Devasthanam is able to conduct these utsavams in such a spiritually fulfilling manner. We pray that the Lord continues to shower His anugraham upon all devotees and guides us in preserving and propagating our rich Srivaishnava sampradaya.

ஸ்ரீ:

# விச்வாவஸு வருட தை மாத பஞ்சாங்கம்

| ஆங்கில தேதி | தமிழ் தேதி | திதி | வாரம் | நக்ஷத்ரம் | உத்ஸவம் | உபயம் |
|---|---|---|---|---|---|---|
| ஜனவரி / பிப்ரவரி | தை | | | | | |
| 15.01.2026 | 1 | த்வாதசி | வியாழன் | கேட்டை | மகர ஸங்க்ராந்தி. காலை பெருமாள், தாயார் மூலவர், உத்ஸவர், தேசிகன் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆண்டாள் வீதிபுறப்பாடு. பொழுதுடன் ஆராதனம் | M/s. சுந்தரம் சாரிடீஸ் |
| 16.01.206 | 2 | த்ரயோதசி | வெள்ளி | கேட்டை / மூலம் | கனு ஆஸ்தானம் – காலை மட்டும். தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை சின்ன கருட வாஹனம் உள்புறப்பாடு | பத்மாவதி கைங்கர்ய ஸபா. தாயார் உத்ஸவம்: ஸ்ரீ R. ராமக்ருஷ்ணன் |
| 17.01.2026 | 3 | சதுர்தசி | சனி | மூலம் / பூராடம் | கனு பரிவேட்டை. திருமால்வடை | ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம் |
| 18.01.2026 | 4 | அமாவாசை | ஞாயிறு | பூராடம் | பெருமாள் உத்ஸவர் திருமஞ்ஜனம் | ஸ்ரீ S. நாராயணன் குடும்பத்தினர் |
| 19.01.2026 | 5 | ப்ரதமை | திங்கள் | உத்திராடம் | ஆளவந்தார் | |
| 20.01.2026 | 6 | த்விதீயை | செவ்வாய் | ச்ரவணம் | காலை பெருமாள், தேசிகன் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு | ஸ்ரீ ஸ்ரீநிவாஸ ராஜ கோபாலன் குடும்பத்தினர் |
| 21.01.2026 | 7 | த்ருதீயை | புதன் | அவிட்டம் | பூதத்தாழ்வார் | |
| 22.01.2026 | 8 | சதுர்த்தி | வியாழன் | சதயம் | காலை பேயாழ்வார் திருமஞ்ஜனம். மாலை வீதிபுறப்பாடு, ஆஸ்தானம் | ஸ்ரீ வைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸி யேஷன் |
| 23.01.2026 | 9 | பஞ்சமி | வெள்ளி | பூரட்டாதி | காலை பெருமாள், தாயார் மூலவர், தாயார் உத்ஸவர் திருமஞ்ஜனம். மாலை தாயார் யானை வாஹனம் உள்புறப்பாடு. ஆஸ்தானம் | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ M.V. ஸந்தானம் |
| 24.01.2026 | 10 | சஷ்டி | சனி | உத்திரட்டாதி | திருமால்வடை. வனபோஜன உத்ஸவம் | வனபோஜனம் ட்ரஸ்ட் |
| 25.01.2026 | 11 | ஸப்தமி | ஞாயிறு | ரேவதி | ரத ஸப்தமி. காலை பெருமாள் ஸூர்ய ப்ரபை புறப்பாடு. மாலை சந்த்ர ப்ரபை புறப்பாடு | ஸ்ரீ ஜெயக்குமார் - C/o. கொடவாசல் க்ருஷ்ணன் |
| 26.01.2026 | 12 | அஷ்டமி | திங்கள் | அச்வினி | திருமால்வடை | |
| 27.01.2026 | 13 | நவமி | செவ்வாய் | பரணி | திருமால்வடை | |
| 28.01.2026 | 14 | தசமி | புதன் | கிருத்திகை / ரோஹிணி | கலியன் | |
| 29.01.2026 | 15 | ஏகாதசி | வியாழன் | ம்ருகசீர்ஷம் | காலை பெருமாள் உத்ஸவர் திருமஞ் ஜனம். மாலை வீதிபுறப்பாடு | M.K. ஸ்ரீதரன் |
| 30.01.2026 | 16 | த்வாதசி | வெள்ளி | திருவாதிரை | | தாயார் உத்ஸவம்: ஸ்ரீ G. ரங்கராஜன் |
| 31.01.2026 | 17 | த்ரயோதசி / சதுர்தசி | சனி | புனர்வஸு | ராமர் திருமஞ்ஜனம். ஆஸ்தானம் | V.D.R. பண்ட் |
| 01.02.2026 | 18 | பௌர்ணமி | ஞாயிறு | புஷ்யம் | பெருமாள், தேசிகன் திருமஞ்ஜனம். வீதிபுறப்பாடு | வேதபாராயண ஸபா |
| 02.02.2026 | 19 | ப்ரதமை | திங்கள் | ஆயில்யம் | திருமால்வடை | |
| 03.02.2026 | 20 | த்விதீயை | செவ்வாய் | மகம் | திருமழிசை ஆழ்வார் சாற்றுமுறை. பெரு மாள், ஆழ்வார் திருமஞ்ஜனம். வீதிபுறப் பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ A. வீரராகவன் குடும்பத்தினர் & ஸ்ரீ A.V. ராமன் |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 04.02.2026 | 21 | த்ருதீயை | புதன் | பூரம் | ஆண்டாள் | |
| 05.02.2026 | 22 | சதுர்த்தி | வியாழன் | உத்திரம் | தாயார் திருமஞ்ஜனம். உள்புறப்பாடு | ஸ்ரீ S.V.S. ராகவன் |
| 06.02.2026 | 23 | பஞ்சமி | வெள்ளி | ஹஸ்தம் | கூரத்தாழ்வான் சாற்றுமுறை. காலை பெருமாள், தாயார், ஆழ்வான் திருமஞ்ஜனம். மாலை பெருமாள், ஆழ்வான் வீதிபுறப்பாடு. பின்பு தாயாருடன் உள்புறப்பாடு. ஆஸ்தானம், ஸேவாகாலம், சாற்றுமுறை | ஸ்ரீ P.V. ராகவன் பண்ட். தாயார் உத்ஸவம்: ஸ்ரீ S. ஸுந்தரம் குடும்பத்தினர் |
| 07.02.2026 | 24 | ஷஷ்டி | சனி | சித்திரை | மதுரகவிகள் | |
| 08.02.2026 | 25 | ஸப்தமி | ஞாயிறு | ஸ்வாதி | திருமால்வடை | |
| 09.02.2026 | 26 | ஸப்தமி / அஷ்டமி | திங்கள் | ஸ்வாதி | லக்ஷ்மிநரஸிம்ஹர் திருமஞ்ஜனம், ஆஸ்தானம் | |
| 10.02.2026 | 27 | அஷ்டமி / நவமி | செவ்வாய் | விசாகம் | நம்மாழ்வார் | |
| 11.02.2026 | 28 | நவமி | புதன் | அனுஷம் | நாதமுனிகள் | |
| 12.02.2026 | 29 | தசமி | வியாழன் | கேட்டை | தொண்டரடிப்பொடி ஆழ்வார் | |

## வைணவ வழக்குச் சொற்கள் 17

**பரிணயம்:** அக்னி ப்ரதக்ஷிணம்

**பரிஸரம்:** சூழல்

**பல்லாண்டு:** மங்களங்கள் உண்டாகவேண்டும் என்று வாழ்த்துதல்

**பச்சை:** காணிக்கை

**பட்டோலை:** பதிவேடு

**பட்டோலைப் படுத்தல்:** ஏட்டில் எழுதச்செய்தல், To put into writing

**பள்ளியெழுச்சி:** துயில் கலைதல்

**பரம்:** இறைவனின் விண்ணாட்டு நிலை; எம்பெருமான் பரமபதத்தில் (வைகுண்டம்) எல்லா நற்பண்புகளுடன் (கல்யாண குணங்கள்) பெரிய பிராட்டியுடன் நித்யஸூரிகள் சூழ இருக்கும் நிலை

**பரிமளம்:** வாசனைப் பொருள்

**பரிப்பு:** துக்கம் (மனப்பரிப்பு), பரிவு

**பகல்பத்து இராப்பத்து:** அத்யயன உத்ஸவம்

**பறை:** கைங்கர்யம், புருஷார்த்தம்

**பட்டர்:** பராசர பட்டர் (கூரத்தாழ்வானின் திருக்குமாரர்)

**பக்திஸாரர்:** திருமழிசையாழ்வார்

**பச்சை கட்டுதல் / பச்சையிடுதல்:** காணிக்கை செலுத்தல்

**பட்டம்:** மடம், பீடம் அல்லது ஆச்ரமத்தின் தலைமைப் பொறுப்பு

**படி:** தேஹம்; வாக்கியத்தில் ஓர் அளவு

**படிகம்:** பெருமாளுக்கு நிவேதனம் செய்தபின் அப்பொருள்களைச்சேர்க்கும் கலம் (பாத்திரம்)

**பண்டு:** முன்பு ரொம்ப காலம் முன்னால்

**பஞ்சகவ்யம்:** பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம், சாணம் ஐந்தும் சேர்ந்தது

**பஞ்சபேரம்:** த்ருவபேரம் (மூலவர்), கௌதுக பேரம், ஸ்நபனபேரம், உத்ஸவபேரம், பலிபேரம் (நித்யோத்ஸவர்) என்று கருவறையில் உள்ள ஐந்து மூர்த்திகள்

**பரமபதம்:** வைகுண்டம்; ஸ்ரீமந்நாராயணன் வைகும் இடம்

**பரமபதித்தல்:** பூதவுடல் நீங்குதல் (மறைவு)

**பரிபாஷை:** தமக்குள் பயன்படுத்தும் சொல்லாட்சி, குழூஉக்குறி

**பகவர்:** ஸந்யாஸிகள், பாகவதர்கள்

**பள்ளியறை:** பெருமாள் இரவில் சயனிக்க எழுந்தருளும் இடம்

**பத்யம்:** செய்யுள் நடை

**பதி:** ஊர்

**பதிகம்:** 10 பாசுரங்கள்

**பதியெழுகை:** ஊரைக் காலி செய்து வெளியேறுதல்; Evacuation

**பஞ்சபாத்ரம்:** அர்க்யம், பாத்யம், ஆசமனீயம், ஸ்நாநீயம் (பாநீயம்), ஸர்வார்த்த தோயம் இவற்றிற்கான வட்டில்கள்

**பஞ்ச காலம்:** அபிகமனம், உபாதானம், இஜ்யை, ஸ்வாத்யாயம், யோகம் என்ற (தினசர்யையின்) 5 நிலைகள்.

**'தென்னிந்திய வைணவம் - ஓர் அறிமுகம்' நூலிலிருந்து**

(தொடரும்...)

ஸ்ரீ:

# ஸ்வநிஷ்டாபிஜ்ஞானமும் ஸ்வாசார்ய நிந்தையும்

ஸ்ரீ உ.வே. பரவஸ்து ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி, வைகுண்டவாஸீ

ஸ்வநிஷ்டாபிஜ்ஞானம் என்பது ஒரு சேதனன் தானாகவோ, ஆசார்யர்களைக் கொண்டோ ச்ரிய: பதியினிடம் அங்கங்களுடன் ஆத்ம ஸமர்ப்பணம் (பரந்யாஸம்) செய்து கிருத க்ருத்யனான பின் தன்னையும் தான் அனுஷ்டித்த ப்ரபத்தியையும் அதற்கு வரும் பயனான மோக்ஷத்தையும் பற்றி நன்றாய் நிலைபெற்றஇவனுக்குஅந்நிலைக்குஅடையாளங்கள் அந்தந்த ஸமயங்களில் தென்படுவது. இது இவனுக்கு ஸமீபத்தில் வரவிருக்கும் மோக்ஷானந்தத்திலும் மேம்பட்டது. இதன் பெருமையால் ஆழமுள்ளதும் நிரப்ப முடியாததும் ஆகாசத்தைப்போல் பருத்த கூட்டங்கூட்டமுமான பல தவறுகளை மறைப்பதற்கு ஆசார்யர்களால் இவ்விஷயத்தில் பழக்குவிக்கப் பட்டவனாகையால் வல்லமை பெறுகிறான் என்று ஸ்ரீ பெரிய ரஹஸ்யத்தில் ஸ்ரீமந் நிகமாந்த மஹாதேசிகன் ப்ரபன்னனுக்கு உத்தர க்ருத்யத்தைச் சொல்வதற்கு முன் ஸ்வநிஷ்டாபிஜ்ஞானம் என்ற ஓர் அழகான அதிகாரம் அமைத்து அடியில் கண்ட ச்லோகத்தால் அருளிச் செய்கிறார்.

*ஸ்வரூப: உபாயார்த்தேஷு அவிததநிவிஷ்டாஸ்திரமதே:*
*ஸ்வநிஷ்டாபிஜ்ஞாநம் ஸூபகம் அபவர்காத் உபநதாத்।*
*ப்ரதிம்நா யஸ்யாஸௌ ப்ரபவதி விநீத: ஸ்தகயிதும்*
*கபீராந் துஷ்பாராந் ககனமஹத: சித்ரநிவஹாந்।।*

இவ்வதிகாரத்தில் அருமையான அனேக விஷயங்கள் அருளிச்செய்யப் படுகின்றன. ‘ஸ்வரூபத்தில் நிலைபெற்றவர், அதாவது தேஹத்தைக் காட்டிலும் ஆத்மா வேறுபட்டது என்று நன்றாயறிந்தவர், தமக்கு உண்டாகும் அடையாளங்களில் முதலில் பிறர் இவனுடைய தேஹம், இந்திரியங்கள் முதலானவைகளைப் பற்றி சொல்லுகிற குற்றங்கள் ஆத்மாவில் இல்லாததை அறிந்து வருந்துவதில்லை’ என்னும் விஷயம் எல்லா மதங்களிலும் மதாசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

இதற்குமேல் பிறர் தன்னை வைது அவமதிப்பதால் தன் பாவத்தை கட்டிக்கொள்கிறார்களே என்று எல்லையில்லாத தயவும், தாம் அனுசந்திக்க வேண்டிய தம்முடைய குற்றங்களை மறவாமல் செய்தார்கள் என்கிற நன்றியறிவும், பகவானுக்கும் கர்மத்திற்கும் உட்பட்டிருக்கும் தம்முடய நிலையைக்கண்டு தமக்கும் அவமதிக்கும் பிறருக்குமுள்ள கர்மத்திற்கு தகுந்தபடி, ஈச்வரனால் ஏவப்பட்டு அவர்கள் அவமதிக்கிறார்கள் என்று அவர்களிடம் சிறிதும் சித்த விகாரம் அற்றிருப்பதும், தம்முடையதோர் பாபம் குறைந்துவிடுகிறது என்கிற ஸந்தோஷமும் நடைபெற்றால் இவை நான்கும் தேஹத்தைக் காட்டிலும் வேறுப்பட்டதும், எல்லாரும்



இன்புரும்படியான அன்புக்குத் தகுந்த அறிவுள்ளதும், எவ்வகையிலும் ஏழை மற்றும் எல்லாரிடமும் ஸமனாய் வினைக்குத் தகுந்த பயனையளிக்கும் ஸ்வதந்த்ரனான ஸ்வாமிக்கு (ஈச்வரனுக்கு) இஷ்டப்படி செய்யக்கூடிய அடிமையும் பாரதந்த்ரியமுமுள்ளதான தன் ஸ்வரூபத்தில் நிலையுண்டென்பதற்கு அடையாளங் களாக அருளிச் செய்யப்பட்டன.

இப்படி மற்றொரு ஆசார்யரும் சொல்லவில்லை என்று மேதாவிகளான பெரியோர்கள் புகழ்கிறார்கள். இவைகளைக் கேட்டு மேனாட்டு தத்வ சாஸ்த்ரிகள் ஆச்சர்யப்படுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். இதனால் ஸ்ரீஸ்வாமி தேசிகன் ஸ்ரீஸூக்திகளுக்கு பிறர் கையாலே விடுதீட்டு என்கிற படி பிறர் கொண்டாடும் பெருமை சொந்தம் என்பது வெளிப்படை. இப்படியே ப்ரபத்தியிலும் வரவிருக்கும் மோக்ஷத்திலும் நிலை உண்டு என்பதற்கு அடையாளங்களை அருளிச்செய்த அழகை அறிந்த ரஸிகர்கள் இவ்வாசிரியன் அருமருந்தான ஸ்ரீஸூக்திகளையும் இவர்காட்டிய வழியையும் விட்டு வேறிடம் செல்வார்களோ? ஆனால் மேற்சொன்ன ஸ்வநிஷ்டாபிஜ்ஞானத்தை ஆசார்யனையும் தெய்வத்தையும் தூஷிப்பவர்களிடம் கொள்ளலாகாதென்று யதாசக்தி நிக்ருஹ்ணியாத் தேவதா குருநிதகான் (சக்தியுள்ளவரையில் தெய்வத்தையும் குருவையும் சிந்திப்பவரைத் தடுக்க வேண்டும்) என்று நம் தேசிகோத்தமன் உபதேசித்தருளினார். சக்தி குறைநதவராயினும் தம்மால் இயன்ற வரையில் தடுக்கவேண்டுமென்பது 'யதாசக்தி' என்பதால் ஏற்படுகின்றது.

இங்கு சிலர் ஆசார்ய தூஷணத்தில் கோதென்றி கழினும் கூர்மதீயீர் எள்ளத்தனை இகழாது என் எழில்மதியே என்று அருளிச்செய்திருப்பதால் ஸ்ரீதேசி கன் திருவுள்ளத்திற்கு அவர் காட்டிய வழியையும் அவர் ஸ்ரீஸூக்திகளையும் தூஷிப்பது தட்டாகாது என்று நினைப்பர்கள். அது உசிதமாகாது. ஆசார்ய விஷயத்திளுள்ள ஸ்வநிஷ்டாபிஜ்ஞானத்தை தம் விஷயத்திலும் தம்மை பிறர் அவமதிக்கும் காலத்தில் ஏற்படும் நிலையை ஆசார்யர்களை பிறர் தூஷிக்கும் ஸமயத்திலும் கொள்ள வேண்டுமென்பது முன்னோர் துணிபு. தெய்வத்திற்கும் ஆசார்யர்களுக்கும் ஸர்வ ஸ்வத்தையும் சரீரத்தையும் உயிரையும் ஸமர்ப்பிக்கவேனும் என்கிற சரீரமர்த்தம் ப்ராணாம்ச்ச ஸத்குருப்யோ நிவேதயேத் ப்ரமாணத்தின்படி அனுஷ்டித்த பூர்வாசார்யர்கள் பலர் உண்டு. சிவாத் பரதரம் நாஸ்தி சிவனிலும் உயர்ந்ததில்லை யென்று சீட்டில் கையெழுத்து செய்யும்படி நிர்பந்திந்த க்ருமிகண்டசோழன் த்ரோணமஸ்தி தத: பரம் சிவமென்ற குருணிக்குமேல் பதக்குண்டென்று கையெழுத்திட்டதற்காகக் கண்களை இழந்தார் நம் கூரத்தாழ்வான். ஸ்ரீ பெரியநம்பிகள் ப்ராணனையும் இழந்தார்.

## தை மாதத்தில் முக்கிய உத்ஸவங்கள்

**தை வருஷப்பிறப்பு, ஸங்க்ராந்தி**
ஜனவரி 15 (வியாழன்)

**கனு உத்ஸவம்**
ஜனவரி 16 (வெள்ளி)

**பரிவேட்டை உத்ஸவம்**
ஜனவரி 17 (சனி)

**வனபோஜன உத்ஸவம்**
ஜனவரி 24 (சனி)

**ரத ஸப்தமி**
ஜனவரி 25 (ஞாயிறு)

**தை புஷ்யம்**
பிப்ரவரி 1 (ஞாயிறு)

**திருமழிசை ஆழ்வார் திருநக்ஷத்ரம்**
பிப்ரவரி 3 (செவ்வாய்)

**கூரத்தாழ்வான் திருநக்ஷத்ரம்**
பிப்ரவரி 6 (வெள்ளி)

**ஸ்ரீ லக்ஷ்மீஹயக்ரீவர்**
**வித்யா அப்வ்ருத்தி ஸங்கல்ப அர்ச்சனை**
பிப்ரவரி 8 (ஞாயிறு)

தம் ஆசார்யரான எம்பெருமானாருக்குச் சிறிதும் ச்ரமம் கூடாதென்று தாம் ச்ரமத்தை வஹித்தார் ஆழ்வான். நம் பூர்வாசார்யர்களெல்லாம் வாழ்நாள் முழுவதும் வீணாகாமல் ஸம்ப்ரதாயத்திற்கே உழைத்துப் போந்தார்கள். அவர்கள் தங்கள் ஸம்ப்ரதாயத்தைப் பற்றியோ, அதை உபதேசித்த ஆசாரியனைப் பற்றியோ, அதில் சொல்லப்படும் தைவத்தைப் பற்றியோ பிறர் வாய் திறக்கவும் ஸஹிக்க மாட்டார்கள். தங்களால் முடித்தவரை அவர் சொல்லும் தூஷணங்களுக்குப் பரிஹாரம் சொல்லுவர். அசக்தர்களாயிருந்தால் சக்தர்களைக்கொண்டு பரிஹாரம் செய்விப்பர். நாஸத்பி: கிஞ்சித் ஆசரேத் என்றபடி அஸத்துக்களுடன் ஸ்நேஹமும் விவாதமும் இல்லாமலாவது இருப்பார்கள். துன்பற்ற மதுரகவி தோன்றக் காட்டும் தொல்வழியே நல்வழிகள் துணிவார்கட்கே என்று தூப்புல் வள்ளல் காட்டிய தொல்வழியே வழியென்று பெரியோர்களுடையவும் ப்ரமுகர்களுடையவும் ஸந்நிதியில் விநயத்துடன் விஜ்ஞாபனம் செய்துகொள்கிறேன்.

# அத்புத கேஸரீ

ஸ்ரீ சோகத்தூர் ஸ்ரீவத்ஸன், நங்கநல்லூர்

தன் ஆச்ரிதர்கள் இவ்வுலகில் படும் துன்பங்களைக் கண்டு பொறுக்க மாட்டாது ஸ்ரீவைகுந்தத்தில் பரஸ்வருபமாக எழுந்தருளியுள்ள எம்பெருமான் நம்மீது இரக்கங்கொண்டு இப்பூவுலகில் யுகந்தோறும் திருவவதரித்து சிஷ்ட பரிபாலனம் (அடியார்களை ரக்ஷித்தல்), துஷ்ட நிக்ரஹம் (துஷ்டர்களைத் தொலைத்தல்) மற்றும் தர்ம ஸம்ஸ்தாபனம் (தர்மத்தை நிலைநாட்டுதல்) ஆகிய மூன்று தொழிலையும் செய்து நம்மை ரக்ஷிக்கின்றான். **பரித்ராணாய ஸாதூனாம் விநாசாய ச துஷ்க்ருதாம்; தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே** என்று கீதாசார்யன் தானே அருளிச்செய்தான்.

மத்ஸ்ய, கூர்ம மற்றும் வராஹ அவதாரங்களில் திர்யக் சரீரத்தை ஏற்றவன் பின் ராம, க்ருஷ்ணாவதாரங்களில் மனுஷ்ய சரீரத்தை ஏற்று அசுரர்களிடமிருந்து நம்மைக் காத்துக் கொடுத்தான். மற்ற அவதாரங்களில் 'சென்று நின்று' ரக்ஷித்த எம்பெருமான் அடுத்த நொடி என்றில்லாதபடி, க்ஷணகாலத்தில் மேலே கூறின மூன்றையும் ஒருசேர நிகழ்த்திக் காட்டியது நரன் மற்றும் சிங்கம் கலந்த ரூபமாய்த் தோன்றிய



ந்ருஸிம்ஹ அவதாரத்தில் தான். எம்பெருமானின் ஒவ்வொரு அவதாரத்திற்கும் ஒவ்வொரு தனிச் சிறப்பு உண்டு. ந்ருஸிம்ஹ அவதாரத்தின் மேன்மை சேரமுடியாததைச் சேர்த்து வைத்ததே.

காட்டில் சுற்றித் திரியும் மற்ற விலங்குகளிடத்தில் தன் உக்ரத்தைக் காட்டிப் பயமுறுத்தி ஓடவிடும் சிங்கமானது தான் ஈன்ற குட்டிகளிடத்தில் மிகுந்த பரிவையும் அன்பையும் வெளிப்படுத்தி ரக்ஷிக்கும். அதேபோன்று ஹிரண்யனிடத்தில் தன் பரத்வத்தை வெளிப்படுத்தி அவனைக் கொன்ற ந்ருஸிம்ஹனே, நீயே சரண் என்று தன்னை நாடி வந்த பாலகனிடம் ஸௌலப்யத்தை வெளிக்காட்டி அவனை ரக்ஷித்தான். ந்ருஸிம்ஹன் தன் திருவுருவத்தில் மட்டுமல்லாது (நரன் + சிங்கம்) தன் திருக்கல்யாண குணங்களிலும் (ஸௌலப்யம் + பரத்வம்) சேராதவற்றை ஒன்று சேர வைத்து வெளிப்படுத்தி நம்மை உய்விக்கிறான். தன்னைச் சரணடைந்த ஆச்ரிதர்களைக் காத்து ரக்ஷிப்பதையே தன் தலையாய கர்த்தவ்யமாக கொண்டுள்ளதாலேயே ருத்ரன் அவனை **விபக்ஷக்ஷய தீக்ஷிதன்** என்று போற்றுகின்றான். இப்படிப்பட்ட பெருமைகளை உடைய அத்புதகேஸரியின் அத்யத்புத கல்யாணகுணங்களை சற்று அநுபவிப்போம்.

**வேத விழுப்பொருள்**

வேதத்தின் உத்தர பாகமான வேதாந்தங்கள் போற்றும் முழு முதற்கடவுளான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே இந்த நரன் மற்றும் சிங்கம் கலந்த திவ்ய மங்கள ஸ்வரூபத்தில் வேகவதி நதிக்கரையில் திருவேளுக்கை என்னும் திவ்யக்ஷேத்ரத்தில் அதியத்புத சிங்க ஸ்வரூபத்தில் நித்யவாஸம் செய்கின்றான் என்று ஸ்வாமி நிகமாந்த மஹா தேசிகன் காமாஸிகாஷ்டகத்தில் இப்பெருமானை மங்களாசாஸனம் செய்கின்றார்.

*ச்ருதீநாமுத்தரம் பாகம் வேகவத்யாச்ச தக்ஷிணம்।*
*காமாததிவஸந் ஜீயாத்கச்சிதத்புதகேஸரீ॥*
*[காமாஸிகாஷ்டகம் - 1]*

ந்ருஸிம்ஹன் அஜ்ஞானம் என்னும் இருளில் சூழ்ந்திருக்கும் நம்மை உய்விக்க வல்லவன், வேதமாய் விரிவுபெற்ற விளக்கு என்று திருக்கடிகை எம்பெருமானை முன்னிட்டு திருமங்கையாழ்வார் மங்களாசாஸனம் செய்கின்றார்.

*மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை என்னுள்*
*புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை*
*தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த*
*அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே.*
*[பெரிய திருமொழி 8-9-4]*

**அகடிதகடினா ஸாமர்த்யம்**

**ஸர்வேந்த்ரியைரபிவினா ஸர்வம் ஸர்வத்ர ஸர்வதா** (மந்த்ரராஜ பத ஸ்தோத்ரம் - 5) என்றபடி ஆச்ரிதர்களை ரக்ஷிக்கும் தசையில் எம்பெருமானின் அகடிதகடினா சாமர்த்தியமானது சேதனர்களின் அறிவு நிலைக்கு எட்டாத ஒன்றாக உள்ளது. அவ்வளவிலே ஜகத்ரக்ஷகனான எம்பெருமான் மற்ற அவதாரங்களில் ஏற்ற ஸ்வரூபமானது ஸங்கல்பமாத்ரத்தால் அவன் உகந்து ஏற்றவை. ஆனால் ந்ருஸிம்ஹ அவதாரத்திலோ அவன் ஏற்ற இந்த ஸ்வரூபமானது ஹிரண்யன் நான்முகனிடத்தில் பெற்ற வரத்தினாலன்றோ. இவனின் முந்தைய அவதாரங்களில் அவன் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்களைக் கண்டு கலங்கியன்றோ நரனாலும் ம்ருகத்தாலும் மரணம் கூடாது என்று வரம் வாங்கினான் இரணியன். ஆனால் செய்ய முடியாத காரியத்தைச் செவ்வனே செய்து முடிப்பவனான மாலோலனோ **நாரஸிம்ஹ வபு**வாகத் தோன்றி நிராயுதபாணியாய் நின்று ஹிரண்யனை கொன்று முடித்தான். ஸர்வஜ்ஞன் நடத்த முடியாத காரியம் என்றொன்று உண்டோ!

**ஸௌந்தர்யம்**

ந்ருஸிம்ஹன் விஷம விலோசனன், முக்கண்ணப்பன். அவனின் ஒரு திருக்கண்ணானது தகிக்கும் ஸூர்யனைப் போன்றது. இதிலிருந்து வெளிப்படும் அக்நியானது பகைவர்களை எரித்துச் சாம்பலாக்கக் கூடியது. மற்றொரு திருக்கண்ணானது சந்திரன் போன்று அடியார்களுக்குக் குளிர்ச்சியைக் கொடுக்கிறது. ஒரு திருக்கையில் சக்கரத்தையும் மற்றதில் சங்கையும் இன்னொன்றில் பிராட்டியைப் பற்றிக்கொண்டும் வலது திருக்கையில் வரத - அபய பத்மங்களைத் தாங்கியவாறு ஸேவை ஸாதிக்கும் அவனின் குறையொன்றுமில்லாத பரிபூர்ணமான ஸேவையை ஸேவிக்க கண்கள் கோடி இருந்தாலும் போதாது (**ஸ்ரீமதகலங்க பரிபூர்ண சசிகோடி ஸ்ரீதர மநோஹர சடாபடல காந்த** - ஸ்ரீ ந்ருஸிம்ஹாஷ்டகம் - 1).

ஸ்வாமி ந்ருஸிம்ஹனின் திவ்யமங்கள ஸ்வரூபத்தை

*ஆகண்டம் ஆதி புருஷம்।*
*கன்டிரவம் உபரி குண்டித் ஆராதிம்॥*
*[காமாஸிகாஷ்டகம் - 3]*

என்று திருக்கழுத்துக்கு மேலே சிங்க ஸ்வரூபமாகவும் அதற்குக் கீழே வேதங்கள் போற்றும் பரமபுருஷ ஸ்வரூபமாகவும் அதியத்புதமாக எழுந்தருளியிருப்பதாக ஸ்வாமி தேசிகன் வர்ணிக்கிறார்.

**பரத்வம்**

*பகவாநிதி சப்தோயம் ததா புருஷ இத்யபி।*
*நிரூபாதி சவர்த்தேதே வாஸுதேவ ஸநாதனே॥*

பகவான், புருஷன் என்னும் இரு சப்தங்களும் இயற்கையாகவே வாஸுதேவனையே குறிக்கின்றன



என்று வேதம் உத்கோஷிக்கிறது. ப்ரஹ்மம் நிர்குணம், நிர்விசேஷம், நிரவ்யயம், நிருபாதகம், அநிர்வசனீயம் என்றெல்லாம் ப்ரஹ்மத்திற்கு அது இல்லை இது இல்லை என்று விபரீத ஜ்ஞானத்தால் பொருள் கூறி வந்தவர்களின் அஜ்ஞானம் வெந்துபோம்படி அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதானான ச்ரிய: பதி இதோ இங்கே சேராத திருவுருவம் கொண்டு ப்ரத்யக்ஷமாய் நேரில் தோன்றி தெளிய வைத்தானே. தன் அத்யத்புத குண சேஷ்டிதங்களை வெளிப்படுத்தி அவனாலே மயர்வற மதிநலம் அருளப்பெற்ற இமையோர்களைக் கொண்டு தன்மேல் ஈன்கவிகள் பாடவைத்தானன்றோ!

*எங்கும்முளன் கண்ணன் என்ற மகனைக் காய்ந்து*
*இங்கில்லையால் என்றிரணியன் தூண்புடைப்ப*
*அங்கப்பொழுதே அவன்வீயத்தோன்றிய என்*
*சிங்கப்பிரான் பெருமையாராயும் சீர்மைத்தே*
*[திருவாய்மொழி 2-8-9]*

வேறேயொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால், முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளே வைத்து நாட்டிய தூண் அது என்றும் வேறு யாரேனும் கையால் தட்டட அத்தட்டியவிடத்திலிருந்து தோன்றினால் 'அவர் தம் கையில் நரசிங்கத்தை அடக்கிக் கொண்டு வந்து தூணிலே பாய்ச்சினார் என்றும் ஹிரண்யன் சொல்லிவிடுவானாம். அவன் ஓரிடத்தில் தட்ட மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம் தோன்றினால் 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த பிரதிஜ்ஞை பொய்யாகிப் போகும். மேலும்

அவன் தட்டினபிறகு சிறிதுநேரம் கழித்து நரசிங்கம் தோன்றினால் ‘நான் தட்டினபொழுது திருமால் அங்கில்லை’ என்று அவன் சொல்லி, திருமால் எங்கும் எப்பொழுதும் எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறமும் வியாபித்திருக்கிற **(அந்தர் பஹிஸ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:** – நாராயண ஸூக்தம்) பரத்வ நிலையை மறுக்கக் கூடுமாகையாலே அவ்விரணியன் **‘அளந்திட்ட தூணை அவன் தட்ட ஆங்கே வளர்ந்திட்டு வாளுகிர்ச் சிங்கவுருவாய்’** (பெரியாழ்வார் திருமொழி 1-7-9), எந்தவொரு யோனியில் இருந்தும் பிறவாமல், குழந்தை, யௌவனம் போன்ற நிலைகளைக் கடந்து, அவன் ப்ரஹ்மருத்ராதிகளிடத்திற் பெற்ற வரம் பழுதுபடாமல் அப்பொழுதே ஒரு க்ஷண நேரத்தில் நரங்கலந்த சிங்கமாய் ப்ரஹ்ம ஸ்ருஷ்டியினுட்படாமல், தன்னைத்தானே தோற்றுவித்துக் கொண்டான் என்று ப்ரஹ்மத்திற்கு தேச, கால மற்றும் வஸ்து பரிச்சேதம் கிடையாது என்பதனை எம்பெருமான் ந்ருஸிம்ஹ அவதாரம் மூலம் காட்டுவதாக ந்ருஸிம்ஹனின் பரத்வத்தை மிக அழகாக நிர்ணயம் பண்ணுகிறார் ஸ்வாமி நம்மாழ்வார்.

**ஸௌலப்யம்**

ஆளரியாய் திருவவதரித்த நரசிங்கனுக்கு ஆச்ரிதர்கள் மேலுள்ள பக்ஷபாதம் தான் எத்துணை? அடியார்களை எப்படிக் காப்பது என்று ஸதா ஸர்வ காலமும் சிந்தனை செய்வதற்காகவேயன்றோ பெருமான் இப்பூவுலகில் பல க்ஷேத்ரங்களில் பர்யங்க பங்கம் என்னும் ஆஸனத்தைக் கொண்டு யோகாந்ருஸிம்ஹனாக வீற்றிருக்கிறான்.

**அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் யான் ஆர்** (திருவாய்மொழி 5-1-7) என்று அவனின் பரத்வத்தை எண்ணி அடியோங்கள் நீசர்கள் நிறைவொன்றில்லாதவர்கள் என்று விலகவொண்ணாதபடி அடியார்க்கு மெய்யனான காமாஸிகன் தன் ஸௌலப்ய ஸௌசீல்யங்களைக் வெளிக்காட்டி நம்முடன் இரண்டறக் கலந்து நம்மை உய்விக்கின்றான்.

குழந்தை ப்ரஹ்லாதனை அவன் தந்தை செய்யும் ஹிம்ஸைகளிலிருந்து காக்க வேண்டும். ஹிரண்யனால் சிறைவைக்கப்பட்ட ஞானிகளையும் மஹான்களையும் விடுவிக்கவேண்டும். தேவர்களையும்வேதத்தையும்அக்கொடூரனிடமிருந்து ரக்ஷிக்க வேண்டும். எம்பெருமானுக்கு பரமபதத்தில் இருப்பு கொள்ளவில்லை. இமையோர் தலைவன் ஒரு குழந்தை அழைத்தா வரப்போகிறான் என்ற இறுமாப்பு ஹிரண்யனுக்கு. ஒரு சிறு குழந்தையானாலும் தன் பரம பக்தனாதலால் அவன் துன்பப்படுவது அவனுக்கு எவ்வளவு அஸஹ்யமாய் இருக்கிறதென்பதை நிரூபித்தான். அவனின் ஸௌலப்யம் அவனை இ(ர)றங்கி வர வைத்தது. எம்பெருமான் எண்ணற்ற திருக்கல்யாண குணங்களை உடையவனாயிருப்பினும் அவனுடைய மற்ற குணங்களனைத்தும் தரம் பெறுவது அவன் ஸௌலப்யத்தாலேயே அன்றோ!

**ஸர்வசேஷி, ச்ரிய: பதி:**

குழந்தை ப்ரஹ்லாதன் நின் **பாதமே சரணாகத் தந்தொழிந்தாய்** (திருவாய்மொழி 5-7-10) என்று ஸ்ரீமந்நாராயணனை வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்துக்கொண்டு, தன் தந்தை தன்னிடத்தில் செய்த அபசாரத்தையெல்லாம் பொறுத்துக்கொண்டான். ஆனால் ஸர்வேச்வரன் தன் மீது செய்யும் தோஷங்களைக் கூடப் பொறுப்பான், தன் பக்தர்கள் மீது இழைக்கப்படும் தோஷங்களைக் க்ஷணகாலமும் பொறுக்கமாட்டானன்றோ! **தனக்குரியனாய் அமைந்த தானவர்கோன் கெட்டான், உனக்குரியனாய மைந்தன் உய்ந்தான்** (நூற்றெட்டுத் திருப்பதி அந்தாதி - 77) என்றபடி ஸ்ரீமந்நாராயணனே பரத்வம், நாம் எல்லோரும் அவனுடைய தாஸர்கள் **(தாஸபூதா ஸ்வத ஸர்வே ஹயாத்மான: பரமாத்மந: -** மந்த்ரராஜபத ஸ்தோத்ரம் - 11) என்று உணர்ந்த ப்ரஹ்லாதன் **ஈசன் அடங்கெழில் அஃதென்று அடங்குக** (திருவாய்மொழி 1-2-7) என்று அவனுள்ளே அடங்கிப் போனான். இதனை உணராத ஹிரண்யன் எம்பெருமான் திருக்கைகளாலேயே மாண்டே போனான்.

*த்வயி ரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:*
*த்வயி சாரக்ஷதி ரக்ஷகை: கிமந்யை:।*
*[காமாஸிகாஷ்டகம் - 8]*

ந்ருஸிம்ஹன் ஒருவனை ரக்ஷிக்கவேண்டும் என்று ஸங்கல்பம் செய்துவிட்டால் மற்ற தெய்வங்கள் காப்பால் என்ன பயன்? ந்ருஸிம்ஹன் ஒருவனை ரக்ஷிக்கவேண்டாம் என்று ஸங்கல்பம் செய்துவிட்டால் மற்ற தெய்வங்கள் காப்பால் என்ன பயன்? என்று அவனே ஸர்வசக்தன், அவன் ஒருவனே சரணடையத்தக்கவன் என்பதனை கவிதார்க்கிக ஸிம்ஹமான ஸ்வாமி தேசிகன் மிக அழகாக வெளியிடுகிறார்.

ப்ரஹ்மன், ருத்ரன் முதலிய எல்லாத் தேவர்களும் வணங்கி வழிபடும் நரசிங்கப் பெருமானிடத்தில் நம்பிக்கையுடனும் பக்தியுடனும் ப்ரபத்தி பண்ணும் ஆச்ரிதர்கள் ஸம்ஸாரம் என்னும் பேரிருள் சூழ்ந்த குகையிலிருந்து மீட்கப் பட்டு அவனின் திருவடித் தாமரையை அடைவார்கள்.

**Sponsorships and donations towards publication expenses are welcome**



தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருநக்ஷத்ரம்



ஸ்ரீ:





பகல்பத்து உத்ஸவம்












**திருப்பாவை கோலம்**





**திருப்பாவை உபந்யாஸம்**







வைகுண்ட ஏகாதசி









## வைகுண்ட ஏகாதசி











இராப்பத்து உத்ஸவம்











இராப்பத்து உத்ஸவம்













நம்மாழ்வார் திருவடி தொழல்









நம்மாழ்வார் திருவடி தொழல்



உ









இயற்பா, தேசிக ப்ரபந்தம் சாற்றுமுறை









ஆண்டாள் நீராட்ட உத்ஸவம்

ஸ்ரீ:







# 'கூடாரை' 100 தடா உத்ஸவம்







ஸ்ரீ:



ஆண்டாள் திருக்கல்யாணம் நாட்டிய நிகழ்ச்சி



# ஸ்ரீ ஆண்டாள் அருளும் அமுதம்

Dr. ஸ்ரீமதி ஹேமா ராஜகோபாலன், பெங்களூரு

ஸ்வாமி தேசிகன் ஸ்ரீ கோதாஸ்துதியில் திருப்பாவையை விச்வோபஜீவ்யம் அம்ருதம் (உலகை வாழ்விக்கும் அமுதம்) என்று போற்றுகிறார். பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட அம்ருதம் போல் வேதமாகிய கடலிலிருந்து வெளிப்பட்ட அமுதமே திருப்பாவை என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். ரத்னாட்யம் என்பது ஸமுத்ரம். வெளியில் தெரியாத பல ரத்னங்கள் கடலின் ஆழத்தில் உள்ளது போல் திருப்பாவையின் மொழிவளமும் சொல்லமைப்பும் ரத்னப் பெட்டகங்களே! சித், அசித், ஈச்வரனாகிய மூன்று தத்வங்கள், திருமந்த்ரம், த்வயம், சரமச்லோகமாகிற மூன்று ரஹஸ்யங்கள், அர்த்த பஞ்சகம், பரவ்யூஹாதி எம்பெருமானின் ஐந்து நிலைகள் மற்றும் பக்தி, ப்ரபத்தி போன்ற உபாயங்கள் என அனைத்தும் இவ்வருளிச்செயலில் ஆங்காங்கே உள்ளுறைப் பொருளாக உறைந்திருப்பதை நம் ஆன்றோர்கள் காட்டியருளினர். குறிப்பாகப் பெருமாளை இவள் அழைக்கும் (ஸம்போதனம்) விளிச்சொற்களில் இவை பொதிந்திருப்பது காணில் நமக்கு ஏற்படுவது வியப்பும் ஆனந்தமுமே! உதாரணமாக ஓரிரண்டைக் காணலாம்.

செப்பமுடையாய் எனத் தொடங்கி மூன்று ஸம்போதனங்களில் எம்பெருமான் அருளிச்செய்த மூன்று சரமச்லோகங்களை அழகாகக் காட்டுகிறாள் ஆண்டாள்!

செப்பமுடையாய் – செப்பம் என்பது ஆர்ஜவம் எனப்படும். நேர்மை, வாக்குத்தவறாமை, சென்னதைச் சொன்னபடி செய்யும் தன்மை என்று இதற்குப் பொருள் கொள்ளலாம். ஸ்ரீவராஹப்பெருமாள் அருளிச்செய்த சரம ச்லோகத்தில் அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாங்கதிம் என்று காண்கிறோம். ப்ரபந்நனை அழைத்துச் செல்வதாக அருளிச் செய்துள்ளார். அதன்படி உத்க்ரமண (உயிர் பிரியும்) காலத்தில் ஆத்மாவை உடலிலிருந்து பிரித்து அர்ச்சிராதி மார்கத்தில் சரண்யன் வழிப்படுத்துவதை ஸ்வாமி தேசிகன் தாம் அருளிச் செய்த பரமபத ஸோபானத்தில் விரிவாகக் காட்டுகிறார். பரமபதத்துக்குத் தம் அடியாரை இட்டுச் செல்லும் இவ்வுபகாரத்தை நயாமி – அழைத்துச் செல்கிறேன் என்று அருளிய வராஹப்பெருமானின் சரம ச்லோகம் இங்கு உணர்த்தப்படுவதை நாம் காணலாம்.

திறலுடையாய் - ஸாமர்த்யம் உள்ளவன் என்பதை



இவ்வழைப்பு குறிக்கும். இரண்டாவதான ஸ்ரீராம சரமச்லோகம் இங்கே காட்டப்படுகிறது. ஸக்ருதேவ எனத் தொடங்கி அபயம் ஸர்வ பூதேப்ய: ததாமி என்பது ச்லோகம். பூமியில் வாழும் அனைத்து உயிர்களை ரக்ஷிப்பதும் ஒவ்வொருவரையும் பிற ஜந்துக்கள், பூதங்களிடமிருந்தும் ரக்ஷிப்பதும் தாம் கொண்ட விரதம் என்று சரண்யன் அருளுவதாக இதனை ஆசார்யர்கள் விரித்துரைக்கின்றனர். இவ்விரு உபகாரங்களையும் செய்யவல்ல சக்தி படைத்தவன் எம்பெருமான் ஒருவனே என்பதால் இந்த அழைப்பு ஸ்ரீராம பிரானின் சரமச்லோகத்தை நமக்கு உணர்த்த வல்லதாகும்.

செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா - ஸாது க்களை ரக்ஷிப்பதும் துஷ்டர்களை அழிப்பதும் தம் காரியமாகக் கூறியவன் கீதாசார்யன்! இவன் அருளிச் செய்த ஸர்வதர்மாந் எனத் தொடங்கும் மூன்றாவதான சரமச்லோகத்தை இங்கு உள்ளுறைப் பொருளாக நாம் உணரலாம். ஆத்மாவுக்குத் தாபத்தைத் தரும் அனைத்து பாபங்களையும் போக்கி மோக்ஷம் அளிப்பதாக அருளிசெய்த இவ்வெம்பெருமானை கோதை இவ்விதம் எதிரிகளை நாசம் செய்பவன் என்னும் பொருள்பட செற்றார்க்கு வெப்பம் கொடுக்கும் விமலா என்று விளிப்பது சாலவும் பொருந்தும்.

பிறிதோர் பாசுரத்தில் ஊற்றமுடையாய் என்று தொடங்கும் மூன்று ஸம்போதனங்களில் பெருமாளின் பரத்வாதி ஐந்து நிலைகளையும் இப்பிராட்டி உணர்த்துவதைக் காணலாம்

ஊற்றமுடையாய் - அவதாரங்கள் பல எடுத்தருளி ஜீவர்களுக்குப் பல படிகளிலும் உபகாரங்கள் செய்யும் எம்பெருமானை ஊற்றமுடையவனாக இவள் காட்டுவதாகப் பெரியோர் விளக்குவர். மேலும் ச்ருதி, ஸ்ம்ருதி போன்ற ப்ரமாணங்கள் இவனையே பரதத்வம் என்று காட்டுகின்றன. ஊற்றுக்கண்களாகத் திகழும் பல்வேறு அத்யாத்ம க்ரந்தங்களிலும் இப்ரமாணங்கள் ஊற்றுநீராக மென்மேலும் ஊறி வருவதால் ஊற்றமுடையாய் என்னும் விளிச்சொல் ஸர்வேச்வரனாகிய இவனுக்கே பொருந்தும் என்பதும் தமிழ் தரும் சொற்பொருள் விளக்கம்! எனவே இங்கு பரத்வம் காட்டப்படுகிறது.

பெரியாய் - உடலும் புலன்களுமின்றி வீடுபேற்றினைப் பெறவியலாமல் விழுந்து கிடக்கும் ஜீவர்களைக் கண்டு கருணையுடன் ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்பவனாய் விளங்கும் வ்யூஹ ரூபனாகிய வாசுதேவனைப் பெரியாய் என்று அழைக்கிறாள்! இங்கு பெருமாளின் வ்யூஹநிலை காட்டப்படுகிறது.

உலகினில் தோற்றமாய் நின்ற சுடரே - உலகோர் அனைவரும் தங்கள் கண்களால் காணலாம்படி ராம, க்ருஷ்ணாதி விபவ அவதாரங்கள் எடுத்து வந்தவன் இவ்வெம்பெருமானே! எனவே உலகினில் தோன்றியவன் என்று இங்கு விபவம் காட்டப்பட்டது. ஒரு காலத்தில் தோன்றி பின்னர் மறைவதில் ப்ரஜைகளுக்குப் பயன் தர இடமில்லை என்று கருதி உலகில் எங்கும் அர்ச்சா மூர்த்திகளாய் நிலைத்து நிற்பவன் இவனே என்பதால் நின்று என்னும் சொல்லால் அர்ச்சை உணர்த்தப்படுகிறது. சுடர் என்பது ஏகாந்தத்தில் த்யானம் செய்து தரிசிக்கலாம்படி ஒவ்வொரு ஜீவனுக்குள்ளும் சுடராக விளங்கும் அந்தர்யாமிப் பெருமாளையே சுடரே என்று மிக அழகாகக் காட்டியருளுகிறாள். அடுத்து

மாமாயன் மாதவன் வைகுந்தன் – என்று தொடர்ச்சியாக மூன்று திருநாமங்களை அருளிச் செய்திருப்பது அற்புதமானது. தைவீ ஹ்யேஷா குணமயீ என்னும் கீதா ச்லோகத்தில் மாயை எனப்படும் இப்ரக்ருத்தியில் பிறந்தவர்கள் தம்மைச் சரணடைந்து விடுபடவியலாத இம்மாயையிலிருந்து விடுபடலாம் என்று அருளிச் செய்கிறான். எனவே இப்பெருமானின் மாமாயன் என்னும் இத்திருநாமம் ஸம்ஸாரிகளான பத்தர்களுக்கெனவே அருளப்பட்டது எனலாம்.

மாதவன் - இந்தத் திருநாமம் பிராட்டியுடன் கூடிய பெருமாளைக் குறிக்கும். ஸ்ரீமந்நாராயண சரணௌ எனத் தொடங்கி உபாய, உபேயங்களை இருவரி களில் காட்டும் த்வய மந்த்ரம் முமுக்ஷுக்கள் பெற்ற வரப்ரஸாதமன்றோ? எனவே முக்தர்களுக்கெனத் திகழும் திருநாமம் மாதவன் எனலாம்.

வைகுந்தன் - என்னும் திருநாமம் பரமபதம் வாழ் பெருமானை 'ஸதா பச்யந்தி' என்று அனவரதமும் நித்யசூரிகள் சூழ்ந்திருந்து இப்பெருமானை ஏத்துவது ஸ்ரீவைகுண்டத்திலே! எனவே வைகுந்தன் என்னும் திருநாமம் நித்யர்கள் உகந்து போற்றுவது எனலாம். இவ்விதம் இம்மூன்று திருநாமங்களும் பத்த, முக்த, நித்யர்களான மூன்றுவித ஜீவாத்மாக்களையும் உடனிருந்து உணர்த்துவதை நாம் உணரலாம்.

திருப்பாவையாகிற அமுத ஸாகரத்தில் மேலும் பல அபூர்வ கருத்துகளாகிற ரத்னங்களையும் முத்து க்களையும் ஆன்றோர் காட்டியருளும்போது நாமும் நம் பாக்யத்தால் உணர்ந்து மகிழலாம்! பாக்ய வந்த: லபந்தே!!


## ஆஸ்திகர்கள் கவனத்திற்கு

பரமபத ப்ராப்தி அடைந்தவர்களுக்கு 12 நாட்கள் வரையிலான கைங்கர்யங்களைச் செய்யும் வகையில், ஆறு பகுதிகளுடன், நம் தேவஸ்தானத்தின் 'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்' இயங்கி வருகிறது.




முகவரி மற்றும் விவரங்களுக்கு:

**'ஸ்ரீ வேங்கடேச தீர்த்தம்'**

9/5, வேங்கடேச அக்ரஹாரம் தெரு,

மயிலாப்பூர், சென்னை – 600004. போன்: 044 – 4322 9401.

**நிர்வாகம்: ஸ்ரீ வேதாந்த தேசிகர் தேவஸ்தானம், மயிலாப்பூர், சென்னை – 600004.**

ஸ்ரீ:

# சரணடைந்து சரண் அடைவோம்

**ஸ்ரீமதி பழவேரி ரமா ராகவஸிம்ஹன்**

**நல்வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி** (1-1-11),

**தொண்டக் குலத்தில் உள்ளீர் வந்து அடிதொழுது ஆயிர நாமம் சொல்லி** (1-1-5) உய்வீர் என்கிறார் எம்பெருமானின் மாமனார் பெரியாழ்வார் திருமொழியில்.

**நாமம் பலவும் நவின்று** (9) - தனது நோன்புக்கான பலனாய் அவனையே அபேக்ஷிக்கிறாள் பெரியாழ்வார் புத்ரி திருப்பாவையில்.

**பெருமான் திருநாமம் பிதற்றி நும்தம் பிறவித் துயர் நீங்குதும்** (3-2-4) - எம்பெருமானின் திருநாமங்களைத் தன்னிலை அறியாது பிதற்றினால் கூட ஜன்ம ம்ருத்யு என்ற சங்கிலித் தளையிலிருந்து கர்மபத்தர்களை விடுவித்து புநராவ்ருத்தியற்ற நிலையினை அவை அநுக்ரஹிக்கும் என்கிறார் திருமங்கை ஆழ்வார் பெரிய திருமொழியில்.

**சிறந்தார்க்கு எழு துணையாம் செங்கண் மால் நாமம்** (44) - ஆச்ரிதரின் உஜ்ஜீவநத்திற்கு ஹேதுவாகும் துணை என்கிறார் பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியில்.

**திருமாலிருஞ்சோலை மலையென்றேன் என்ன திருமால் வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்** (10-8-1) - திருமாலிருஞ்சோலை என்று அவன் இருப்பிடத்தினைக் கூறினேன். அதையே வ்யாஜமாகக் கொண்டு அந்தத் திருமாலானவன் என் நெஞ்சினுள் புகுந்து என்னை ஆட்கொண்டான் என்று கூறும் நம்மாழ்வார் திருவாய்மொழி இது.

ஆழ்வார்கள் கொண்டாடும் எம்பெருமான் திருநாமங்களின் ஏற்றத்தினை ஆசார்யன் தேசிகனும் தனது பல ஸ்ரீஸூக்திகளில் கொண்டாடிக் களிக்கிறார். எம்பெருமானின் வாசஸ்தலங்களுக்கு மட்டுமல்ல அவனது திருநாமங்களுக்கும் ரக்ஷண கார்யத்தில் வாசியுண்டு என்பதை உணர்த்தும் ஆசார்யன் தேசிகனின் ப்ரபந்தங்கள் சிலவற்றில் ஹ்ருதயமிருத்தி, அவர் கொண்டாடும் நாமங்களை நாமும் கொண்டாடி அவற்றிடம் அபயம் ப்ரார்த்திப்போம்.

**ஆசார்யன் கொண்டாடும் நாமங்கள்**

ஸ்வாமி தேசிகன் தனது ப்ரபந்தங்களில் எடுத்தாளும் ஆச்சர்யமான பகவன் நாமங்கள் சிலவற்றைக் காண்போம்.

கோபால விம்சதி - **வல்லப சக்ரவர்த்தீ**

தேஹளீச ஸ்துதி - **பக்தப்ரியன்**

மும்மணிக்கோவை - **தெய்வநாயகன்**



கருட தண்டகம் / கருட பஞ்சாசத் – **விக்ரமன்**

பரமத பங்கம் - **மாயக்கூத்தன்**

சரணாகதி தீபிகையின் ஐம்பத்து இரண்டாவது ச்லோகத்தில் குணாநுகுணமாக மேலும் சில நாமங்களின் மூலம் எம்பெருமானைக் கொண்டாடுகிறார் ஸ்வாமி தேசிகன்.

*ஸ்வாமீ தயாஜலநிதி: மதுர: க்ஷமாவாந்*
*சீலாதிக: ச்ரிதவச: சுசி: அத்யுதார:।*
*ஏதாநி ஹாதும் அநகோ ந கிலார்ஹஸி த்வம்*
*விக்க்யாதிமந்தி பிருதாநி மயா ஸஹைவ॥*

தீபப்ரகாசப் பெருமானை நோக்கி ஸ்வாமி ஸேவிப்பதாய் அமையும் இந்த ச்லோகத்தில், ‘உன்னைச் சரணடைந்தேன் என்று உன் முன் வந்து நிற்கும் என்னை கை விட்டாயெனில் சரணாகத வத்ஸலன் என்று இன்று வரை நீ வாங்கியிருக்கும் பிருதுகளை இழக்க வேண்டி வரும். அதனால் உனக்கு வேறு வழியில்லை. என்னை நீ ரக்ஷித்தேயாக வேண்டும்’ என்று ப்ரார்த்திக்கிறார் ஆசார்யன்.

சரணாகத வத்ஸலன் என்றறியப்படுவதையே எம்பெருமான் உண்மையான பிருதெனக்

கருதுகிறான். அதனால் அவனிடம் செய்யும் சரணாகதி ஒன்றே அவனை ஸுலபமாக அடைவதற்கான லகுவான வழி என்பதை நிஷ்கர்ஷம் பண்ணுகிறது இந்த ச்லோகம்.

சரணாகதியின் பெருமையை அழுந்தக் கூறும் இந்த ச்லோகத்தில் எம்பெருமான் சரணாகத வத்ஸலனாக இருப்பதற்குக் காரணமாகும் அவனது திருக்கல்யாண குணங்கள் எவையென்பதும் தெளிவாகக் காண்பிக்கப்படுகிறது.

**ஸ்வாமீ** – அனைத்தையும் தனது அதீனத்தில் கொண்டவன்

**தயாஜலநிதி:** – கருணைக்கடல்

**மதுர:** – இனிமையானவன்

**க்ஷமாவாந்** – பொறுமையிழக்காதவன்

**சீல:** – தாரதம்யமில்லாதவன்

**வச:** – வசப்படுபவன்

**சுசி:** – பரிசுத்தன்

**உதார:** – புருஷார்த்தங்களை அருளும் வள்ளல்

**அநக:** – குற்றமில்லாதவன்

இவ்விடத்தே, **அநக:** என்றதன் மூலம், தம்மை அண்டின பாணாஸுரன் ராவணன் போன்றோரை தேவதாந்த்தரங்கள் ரக்ஷிக்காமல் கைவிட்டன. ஆனால், அப்படிப்பட்ட குற்றமேதும் இல்லாதவன் ஸ்ரீமந் நாராயணன் ஒருவனே என்பதை நிர்தாரணம் பண்ணுகிறார் ஆசார்யன். அதனால், கர்மா எனும் சங்கிலித் தளைகள் நீங்கி புநராவ்ருத்தியற்ற நிலைமையினை அடைய அபேக்ஷிக்கும் சேதனர்கள் சரணடைய வேண்டியது குற்றமில்லாதவனான எம்பெருமான் திருவடிகளில் மட்டுமே என்பதை **அநக:** என்ற திருநாமத்தின் மூலம் அறுதியிடுகிறார்.



**பயம் போக்கும் பகவன் நாமங்கள்**

*திறம்பேல்மின் கண்டீர் திருவடிதன் நாமம்*
*மறந்தும் புறம்தொழா மாந்தர் இறைஞ்சியும்*
*சாதுவராய்ப் போதுமின்கள் என்றான் நமனும்தன்*
*தூதுவரைக் கூவிச் செவிக்கு.*
*[நான்முகன் திருவந்தாதி - 68]*

யமகிங்கரர்கள் பாசக்கயிற்றினைத் தம் கைகளில் கொண்டு ஆயுள் முடிந்த ஜீவன்களைப் பிடிக்கக் கிளம்பும் போதில், நமனானவன் அவர்களைத் தன்னருகே அழைத்து அவர்கள் காதோடு ஒரு ரஹஸ்யம் சொல்வான். நாரணன் பேர் சொல்லும் பாகவதர்களிடத்தே ஜாக்ரதையாக இருங்கள். அவர்களைக் கண்டவுடன் பரம ஸாத்விகர்களாய்க் கை கூப்பி வணங்கி ப்ரதக்ஷிணம் பண்ணுங்கள் என்பான். நாராயண பக்தர்களின் ஏற்றத்தினைக் கூறும் ஆழ்வாரின் இந்தப் பாசுர அர்த்தத்தினை ஒத்து இருக்கும் ஆசார்யன் தேசிகனின் ச்லோகம் ஒன்றைக் காண்போம்.

*ரமாதயித ரங்க பூ ரமண க்ருஷ்ண விஷ்ணோ ஹரே*
*த்ரிவிக்ரம ஜநார்த்தந த்ரியுகநாத நாராயண ।*
*இதீவ சுபதாநி ய: படதி நாமதேயாநி தே*
*ந தஸ்ய யமவச்யதா நரகபாத பீதி: குத: ॥*
*[அபீதிஸ்தவம் – 7]*

ஸ்ரீரங்கநாதனை துதிப்பதாய் அமையும் இந்த ச்லோகத்தில் (க்ருஷ்ண விஷ்ணு த்ரிவிக்ரம ஜனார்த்தன நாராயண என்று ) பகவானது நாமாக்களை ஸ்மரிப்பவர்கள், நரகத்தில் விழுவோமோ என்று அச்சம் கொள்ளாது யம பயமின்றி இருப்பர் என்கிறார் ஆசார்யன். எம்பெருமானது திருநாமங்கள் இம்மையில் மட்டுமல்லாது தேஹம் மண்ணில் சரிந்த பின்னரும் சரணடைந்தோரை ரக்ஷித்தருளும் என்பதை விளக்குகிறார்.

ஜன்மம் கொண்டோருக்கு ம்ருத்யு பயத்தினை விடவும் பெரிய பயமென்று ஒன்றிருக்க முடியாது. அத்தகைய பெரும் பயத்தையே போக்கும் பகவன் நாமாக்கள் ஸம்ஸாரத்தில் உண்டாகும் பலவகையான அச்சங்களைப் போக்கும் என்பது திண்ணம். இதற்கு கட்டியம் கூறுவது போலே அமைந்தன ஸ்வாமி அபீதிஸ்தவத்தில் ஸாதித்துள்ள பயநாசந:, ஸர்வ ப்ரஹரணாயுத:, சக்ரீ என்பதான திருநாமங்கள்.

**ரஸமயனும் ரஸாயனமும்**

*அசேஷவேதைரதிகம்யபூம்நா*
*ஸித்தேந ஸித்தைஸ்ச நிஷேவிதேந*
*அமாநுஷீ நூநம் அபூத் அயத்நாத்*
*க்ருஷ்ணேந கேநாபி ரஸாயநேந*
*[யாதவாப்யுதயம் - இரண்டாவது ஸர்கம் - 3]*

''சதுர் வேதங்களால் போற்றப்படும் பெருமை உடையதும், எப்போதும் ஸித்தோபாயமாக இருப்பதும், கருமை நிறம் கொண்டதுமான ஒரு ரஸாயனத்தினால் அமாநுஷீயாகி விட்டாள் தேவகி'' என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

**ரஸாயனம் (ஸாமாந்யார்த்தம்)** - வ்யாதிகளைப் போக்குவதற்காகப் பல பொருட்களை ஒன்றாகக் கலந்து செய்யப்படும் மருந்து.

**ரஸாயனம் (தத்வார்த்தம்)** - ஆநந்தமயத்வம், முக்தப்ராப்யத்வம், சாஸ்த்ரைக வேத்யத்வம்.

**க்ருஷ்ணேந கேநாபி ரஸாயநேந** - ஸ்ரீக்ருஷ்ணன் சக்தி மிகுந்த ஒரு ரஸாயனம் என்று ஸேவித்து, அவன் 'ரஸமயன்' என்பதைக் காண்பித்துக் கொடுக்கிறார் ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரர். ரஸமயனான க்ருஷ்ணனெனும் ரஸாயனத்தின் தன்மைகள் எத்தகையவை என்பதில் அந்வயிப்போம்.

1. இந்த ரஸாயனம் (மருந்து) கசக்காது - **போக்யத்வம்**
2. பருகினால் இதன் ருசி அம்ருதத்தினை ஒத்திருக்கும் - **ஸம்ச்லேஷத்தினால்**
3. இந்த ரஸாயனம் கர்மமெனும் வ்யாதியினைப் போக்கும் - **ந ச புநராவர்த்ததே**
4. பொதுவாக ரஸாயனம் கருப்பு நிறத்தில் இருக்கும் - **இந்த மாயாவியும் கருப்பு**
5. ஜீவன் - மாயையில் கட்டுண்ட வ்யாதியஸ்தன்; நோய் தீர்க்கும் ஔஷதம் – ரஸாயனம்; மருத்துவன் – ரஸமயன் - **ஜீவாத்ம பரமாத்ம ஸம்பந்தம்**
6. இந்த ரஸாயனம் அபரிமிதமான சக்தியினைக் கொண்டது – **கேநாபி**
7. ரஸாயனம் என்பதனால் தான் ராஸலீலை செய்து மயக்கினான் - **லீலாவிபூதி**
8. யோகிகளும் முனிவர்களும் தேர்ந்தெடுத்த ரஸாயனம் இது - **பரமௌஷதம்**
9. அபரிமிதமான சக்தி வாய்ந்தது என்பதனால் இந்த ரஸாயனம் உள்ள போது மற்றவை மருந்துகளும் அல்ல அவச்யமும் அல்ல – **தேவதாந்த்ர ஸம்பந்தம் வீண்**
10. இந்த ரஸாயனம் ச்ருங்காரம் மிகுந்ததாய் உள்ளது - **ஸ்வாபாவிகம்**
11. ரஸா என்பதற்கு பூமி என்றும் ஒரு அர்த்தம் உண்டென்பதனால் இந்த ரஸாயனம் பூமியின் பாரத்தினைப் போக்க வந்தது - **ஸர்வாதார ரக்ஷகத்வம்**
12. இந்த ரஸமயனை கர்ப்பத்தில் தரித்ததனால் தனது தேஹத்தில் தேஜஸ் உண்டாகி மநுஷ்யத் தன்மை நீக்கப்பட்டு தேவகி அமாநுஷீயானாள் – **நித்யஸூரி ஸாம்யம்**

**ரஸமயன்** என்ற எம்பெருமானின் திருநாமத்தினை ஆச்ரிதற்குக் காண்பித்துக் கொடுக்கும் ஆசார்ய ஸார்வபௌமர், அவனே ரஸமாகி அந்த ரஸத்தை அடைவிப்பவனுமாகிறான் என்பதை மிகுந்த ரஸத்துடன் ஸாதிக்கிறார். எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே உபேயமும் உபாயமுமாகிறான் எனும் பகவத் ராமாநுஜ ஸித்தாந்தத்தினை இவ்வளவு ரஸனையுடன் அநுக்ரஹிப்பதில் ஸ்வாமி தேசிகனை ஒத்தார் என்றொருவர் இல்லாமையால் தான் தேசிகனே தேசிகன்.

**மண்ணையுண்ட மாயன்**

யாதவாப்யுதய மஹாகாவ்யத்தின் இரண்டாவது ஸர்கத்தில் 11-வது ச்லோகத்தில் பகவானை விச்வபோக்தா என்கிறார் நம் ஸ்வாமி தேசிகன்

*புக்தா புரா யேந வஸுந்தரா ஸா*
*ஸ விச்வபோக்தா மம கர்ப்பபூத:।*
*இதி த்ருவம் ஸூசநம் ஆசரந்தீ*
*தத்தாத்ருசம் நாடிதகம் ததாந॥*

எட்டாவது முறையாகக் கருவுற்றிருந்த தேவகி மண்ணை உண்டு, **ஸ விச்வபோக்தா மம கர்ப்பபூத:** – 'விச்வத்தை புஜிப்பவன் என் கர்ப்பத்தில் இருக்கிறான்' என்று ஸூசகமாகத் தெரிவித்தாள் என்பது இந்த ச்லோகத்தின் பொருள்.

இங்கு **விச்வபோக்தா** எனும் திருநாமமானது ஸ்வாரஸ்யமான விதங்களில் அநுபவிக்கத்தக்கது.

1. மண்ணையுண்டவன். உண்ணப் போகிறவன். அதனால் **விச்வபோக்தா**
2. வஸுக்களை (வஸ்த்துக்கள்) சுமப்பதனால் பூமிக்கு வசுந்தரா என்று பெயர். உண்ணக் கூடிய வஸ்த்துக்களை சுமக்கும் பூமியையே (பூமி - மண் - விச்வம்) உண்பவன். அதனால் **விச்வபோக்தா**
3. விச்வமும் அவனே. விச்வத்தினை உண்பவனும் அவனே. அதனால் **விச்வபோக்தா**

ஸ்வாமி தேசிகனின் திருவடி தூளியானோர்க்கு மட்டுமே அமையும் ரஸமான அந்வயங்கள் இவை. இதனால் தான் **ந தைவம் தேசிகாத் பரம்** என்று நாம் நம் ஆசார்யனைக் கொண்டாடுகிறோம்.

கஜேந்த்ராழ்வானும் த்ரௌபதியும் பகவன் நாமாக்களிடம் சரணடைந்து தமது ரக்ஷணத்தை உறுதி செய்து கொண்ட பாகவத சீலர்கள். ஆசார்ய ச்ரேஷ்டரான நம் ஸ்வாமி தேசிகன் கொண்டாடும் நம்முடையவனின் திருநாமங்களிடம் **சரணடைந்து** அவன் **சரண் அடைவோம்.** ❋

ஸ்ரீ:

# பக்திஸாரர்

ஸ்ரீமதி இந்திரா ரமேஷ், பெங்களூரு

பக்திஸாரர் எனும் சிறப்புப் பெயர் கொண்டு வைணவ நெறியைப் பின்பற்றியவரும், பன்னிரு ஆழ்வார்களில் ஒருவருமான **திருமழிசை ஆழ்வார்,** தை மாதம் மகம் நக்ஷத்ரத்தில், திருமாலின் ஆயுதங்களுள் ஒன்றான ஸுதர்சன சக்ரத்தின் அம்சமாகத் தோன்றியவர். இவர் திருமழிசை என்ற திருத்தலத்தில் பிறந்தார்.

பார்கவ முனிவருக்கும் கனகாங்கி என்ற அப்ஸரஸ் ஸ்த்ரீக்கும் பிறந்த இவர், கைகளோ கால்களோ இல்லாத சதைக்கட்டியாகப் பிறந்ததால், மனம் சோர்ந்த பெற்றோர் ஒரு மூங்கில் புதரில் விட்டுச் சென்றனர். அக்குழந்தை திவ்ய தம்பதியரின் திவ்ய கடாக்ஷம் பெற்று, உயிருள்ள ஆண்மகவாய் மாறியது.

பின்னர், திருவலன், பங்கஜவல்லி என்ற பழங்குடி தம்பதியினர் -—குழந்தைப்பேறில்லாத தங்களுக்குத் திருமாலின் அருளால் கிடைத்ததாக மகிழ்ந்து -— அக்குழந்தையை எடுத்துச் சென்று வளர்த்தனர். அம்மகவு பல நாட்களுக்குத் தாய் அளித்த பாலைக் குடியாது இருந்தும் உடல் சிறிதும் வாடவில்லை. இந்த அதிசயத்தைக் கேள்விப்பட்டு, அருகிலுள்ள சிற்றூரில் இருந்த ஒரு வயதான தம்பதியர் காண வந்தனர். அவர்கள் அன்புடன் கொண்டுவந்த பாலைக் கொடுக்க, அதனை ஏற்றுக்கொள்ளத் தொடங்கினார். சில ஆண்டுகள் கழித்து, அத்தம்பதியருக்குக் கைம்மாறு செய்ய எண்ணி, ஒரு நாள் தனக்குக் கொடுத்த பாலில் பாதியை அவர்கள் உண்ணுமாறு பணித்தார். அதன் பயனாக இளமை மீண்டு, அத்தம்பதிகளுக்கு ஒரு ஆண் மகவு பிறந்தது. அவ்வாண்மகவே கணிகண்ணன் எனும் பெயரில் திருமழிசை ஆழ்வாரின் அணுக்கச் சீடரானார்.

இவ்விருவரும் அவ்வூரை விட்டு, திருவெஃகா தலத்தில் சிறிதுகாலம் தங்கி, ‘யதோக்தகாரி’ (சொன்னவண்ணம் செய்யும்) பெருமாளுக்குக் கைங்கர்யம் செய்துவந்தனர். அங்கு, அவர்களின் குடிலைச் சீர்செய்து சேவை செய்துவந்த மூதாட்டியை இளமையாக மாற்றி, அவள் முதுமை சேவைக்கு இடையூறாகாமல் இருக்கச் செய்தார். ஈடில்லா எழிலும் இளமையும் பெற்ற அவளைப் ‘பல்லவராயன்’ எனும் அரசன் விரும்பி மணந்தான். என்றும் மாறாத இளமையின் ரகசியத்தை அறிய விரும்பிய அவன், அவளிடம் கேட்க, அவளும் ஆழ்வாரின் புகழை எடுத்துரைத்தாள். அரசனும் தானும் அவ்வாறு இருக்கக் கணிகண்ணனை அழைத்துத் தன் விருப்பத்தைக் கூறினான். ஆழ்வார் ஒருநாளும் இந்த அற்ப ஆசைக்குப் பணியமாட்டார் என அறுதியிட்டுக் கூறினார். பின்னர், தன்னைப் புகழ்ந்து ஒரு கவிதையாவது பாடுமாறு பணித்த அரசனுக்குச் சீடன், ‘ஸ்ரீமந்நாராயணனை அன்றி வேறு யாரையும் பற்றிப் பாட இயலாது’ என மறுத்து விட்டான். இதனால் கோபங்கொண்ட அரசன் கணிகண்ணனை நகரை விட்டு வெளியேறும்படி உத்தரவிட்டான்.

இதை அறிந்த ஆழ்வார், தானும் கணிகண்ணனுடன் உடன் வருவதாகக் கூறினார். மேலும், அவ்வூரின் இறைவனை நோக்கி,

*கணிகண்ணன் போகின்றான் காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா நீ கிடக்க வேண்டா — துணிவுடைய*
*செந்நாப் புலவனும் போகின்றேன் நீயும் உன்றன்*
*பைந்நாகப் பாய் சுருட்டிக்கொள்.*

என்று விண்ணப்பித்தார். அக்கணமே பெருமாளும் ஆழ்வாரின் பின்சென்றார். இதனால் அவ்வூரின் செழுமை மங்க, தன் தவறை உணர்ந்து மனந்சு திருந்திய மன்னன் கணிகண்ணனைத் தேடிச் சென்று, அவரையும் இறைவனையும் கச்சிக்குத் திரும்பிவர வேண்டினான். சீடனும் ஆழ்வாரிடம் முறையிட்டபோது, அவர் பெருமாளிடம்,

*கணிகண்ணன் போக்கொழிந்தான் காமரு பூங்கச்சி*
*மணிவண்ணா நீ கிடக்க வேண்டும் — துணிவுடைய*
*செந்நாப் புலவனும் போக்கொழிந்தேன் நீயும் உன்றன்*
*பைந்நாகப் பாய் விரித்துக்கொள்.*



என்று அன்புக்கட்டளை இட்டார். உடனே பெருமாள் திருவெஃகாவுக்குத் திரும்பிவந்தார். இவ்வாறு அன்புக்கட்டளையால் இறைவனைப் பணியவைத்த பெருமை திருமழிசை ஆழ்வாருக்கு உண்டு.

சிலகாலம் பிறமதங்கள் பற்றிய விஷயங்களை அறிந்து, இறுதியில் பேயாழ்வார் மூலம் உண்மையை யறிந்து, வைணவ தீக்ஷைப் பெற்று பக்தியில் திளைத்த இவர், இதில் தலைசிறந்தவராக விளங்கியதால் **பக்திஸாரர்** எனும் பெயரும் பெற்றார்.

திருக்குடந்தை ஆராவமுதனின் ஸந்நிதியில், சயனத்தில் இருக்காமல் எழும்படி விண்ணப்பித்த ஆழ்வார், தன் பக்திவலிமையால் பெருமாளை எழச் செய்து, அவ்வாறே இருக்கப் பணித்தார். அன்றுமுதல் இன்றுவரை அப்பெருமாள் உத்தான சயனத்திலேயே காட்சி தருகிறார். அப்பெருமாள், ஆராவமுதாழ்வாராகவும், திருமழிசை ஆழ்வார் திருமழிசைப்பிரானாகவும் இன்றளவும் அழைக்கப் படுவது, பக்தியின் பரிவர்த்தனையே!

இவ்வாழ்வார், நான்முகன் திருவந்தாதி எனும் 100 பாசுரங்கள் அடங்கிய வெண்பாவும், திருச்சந்தவிருத்தம் எனும் 120 விருத்தங்களையும் இயற்றியுள்ளார். இவை திருக்குடந்தையில் யோகத்தில் ஆழ்ந்திருக்கும்போது, யோகத்தின் பயனாக வெளிவந்தவை.

‘திருச்சந்தவிருத்தம்’ என்பதைத் ‘திரு + சந்த + விருத்தம்’ என்று பிரித்தால், மங்களகரமான, புனிதமான, இனிமையான ஒலியுடன் கூடிய விருத்த நடையில் அமைந்த அழகான பாடல்கள் என்று பொருள்படும். திருமாலைப் பற்றிய பாடலுடன், வைணவ சித்தாந்த ஸாரத்தை எளிமையாகவும் இசைத்தொடுப்போடும் அமைத்திருப்பது இப்பாசுரங்களின் சிறப்பு.

முதல் பாசுரம் தொடங்கி ஐந்து பாசுரங்கள் வைணவத் தத்துவத்தையும், திருமாலின் சிறப்பையும் மிக அத்புதமாக விளக்குகின்றன. இது பக்தியின் சிறப்பு மட்டுமின்றி, வைணவ சித்தாந்தத்தின் மேன்மையையும் தமிழ் இலக்கியத்தின் ஏற்றத்தையும் உயர்த்துகிறது.

இரண்டாம் பாசுரம் வைணவ கர்மங்களை எண்ணிக்கையுடன் விளக்குகிறது:

*ஆறும் ஆறு ஆறு ஆறாய் ஓர் ஐந்தும் ஐந்தும் ஐந்துமாய்*
*ஏறு சீர் இரண்டும் மூன்றும் ஏழும் ஆறும் எட்டுமாய்*
*வேறு வேறு ஞானமாகி மெய்யினோடு பொய்யுமாய்*
*ஊறொடு ஓசையாய ஐந்துமாய ஆய மாயனே.*

இதில்:

- முதல் ஆறு கர்மங்கள் (அத்யயனம், அத்யாபனம், யஜனம், யாஜனம், தானம், ப்ரதிக்ரஹம்) — இவை அந்தணர்களுக்குரியவை.
- அடுத்த ஆறு ருதுக்கள் (வஸந்தம், க்ரீஷ்மம், வர்ஷம், சரத், ஹேமந்தம், சிசிரம்) — ஒவ்வொரு ருதுவும் இரண்டு மாதங்களைக் கொண்டது.
- ஆறு யாகங்களுக்கும் (ஆக்னேயம், அக்னீஷோமீயம், உபாம்துயாஜம், ஐந்த்ரம், இரண்டு ஐந்த்ராநம்) எம்பெருமான் ஸர்வஸ்வமாய் இருந்து அனுபவிப்பவன்.
- ஐந்து பஞ்சமஹா யஜ்ஞங்கள் (தேவ, பித்ரு, பூத, மனுஷ்ய, பிரம்ம) — இவற்றுக்கும் போக்தா அவனே.
- பஞ்ச வாயுக்களாலான ப்ராணாஹுதிகள் (பிராண, அபான, வ்யான, உதான, ஸமான) பரமாத்மாவுக்கே ஸமர்ப்பிக்கப்படுகின்றன.
- பஞ்சாக்னிகள் (கார்ஹபத்யம், ஆஹவனீயம், தக்ஷிணாக்னி, ஸப்யம், ஆவஸத்யம்) — அவன் சரீரமாகக் கொண்டவன்.
- ஏறு சீர் இரண்டு (ஜ்ஞானம், வைராக்கியம்) — இவை திருமகள் நாயகனையே நோக்கும் உணர்வுகள்.
- ஏறு சீர் மூன்று (பரபக்தி, பரஞானம், பரமபக்தி) — இவற்றுடன் ஐச்வரியம், கைவல்யம், பகவத் ப்ராப்தி ஆகியவற்றையும் கொடுப்பவன் ஸ்ரீமந்நாராயணன்.

இப்படி எண்ணிக்கையைக் கொண்டு சுருக்கமாக வைணவ தத்வத்தை உரைப்பது இப்பாசுரத்தின் தனிச்சிறப்பு.

அடுத்த பாசுரம் வேதாந்தத்துடன் பக்தியையும் ஊட்டுகிறது:

*சொல்லினால் தொடர்ச்சி நீ சொலப்படும் பொருளும் நீ*
*சொல்லினால் சொலப்படாது தோன்றுகின்ற சோதி நீ*
*சொல்லினால் படைக்க நீ படைக்க வந்து தோன்றினாய்*
*சொல்லினால் சுருங்க நின் குணங்கள் சொல்ல வல்லரே? [111]*

வேதாந்த சாஸ்த்ரத்தால் உறவு ஏற்படுத்துபவனும், சொல்லப்படும் பொருளின் அந்தர்யாமியுமாகிய நீ, வேதத்தின் படி படைக்கப்பட்ட ப்ரஹ்மாதிகளின் ஆதாரம். சொற்களால் உன் கல்யாண குணங்களைச் சுருக்கமாகச் சொல்ல முடியுமா? என ஆழ்வார் வியக்கிறார்.

*அத்தனாகி அன்னையாகி ஆளும் எம்பிரானுமாய்*
*ஒத்தொவ்வாத பல்பிறப்பு ஒழித்து நம்மை ஆட்கொள்வான்*
*முத்தனார் முகுந்தனார் புகுந்து நம்முள் மேவினார்*
*எத்தினால் இடர்க்கடல் கிடத்தி? ஏழை நெஞ்சமே!*

என்று சரமச்லோகத்தின் சாரத்தை எடுத்தியம்புகிறார்.

இவ்வாறு, திருமழிசை ஆழ்வார் தம் பாசுரங்கள் மூலம் வைணவ தத்வத்தையும், பக்தியின் ஸாரத்தையும் என்றும் அழியா வண்ணம் தமிழ்க்கவிதையில் பொறித்துள்ளார். ✻

ஸ்ரீ:

# Important Tenets Of Our Sampradaya 34

## Nyasa Dasakam And Adaikkala-Pathu — Telling Works On Saranaagathi

**Sri U. Ve. Natteri P. Srihari (a) Lakshmi Nrusimhacharyar Swami, Mylapore**

The cardinal principle of our Sri Sampradaya is Saranaagathi, which means whole-hearted and absolute self-surrender to Sriman Narayana. Some other terms used interchangeably to denote the act of surrender are Prapathi, Bhara Nyasam, Bhara Samarpanam, etc.

It has unequivocally been established by our Acharyas drawing from the Vedas and Saasthras that there are only two means to attain Moksha: The Doctrine of Devotion (Bhakthi Yoga) and The Doctrine of Surrender (Prapathi Yoga).

Although there are no differences in principle between the two and the desired end or objective of both is salvation, the two means are fraught with some functional differences that matter significantly. Suffice it to say that simplicity, feasibility, flexibility and fast realisation of the goal are some of the inherent advantages of Saranagathi that make it an overwhelmingly superior option as compared to loving devotion to the Lord.



Our Acharyas, through their great works, have stressed the vitality and efficacy of Saranagathi in no uncertain terms.

Swami Desika, ever a faithful follower of tradition, has strained every sinew to establish this fact in his own inimitable style through almost all his philosophical and devotional works.

Therefore, it is evident that one cannot over-emphasise the importance of surrender and our great Acharya has dedicated one Tamil Prabandham and three Sanskrit hymns to exclusively bring out the nuances and features of Saranaagathi. They are: Adaikkala-Pathu, Nyasa Dasakam, Nyasa Vimsathi and Nyasa Thilakam. These, of course, are besides a number of other intricate philosophical and esoteric works.

Adaikkala-Pathu, as the name indicates, comprises 10 Paasurams and the conclusion. Similar is the case with Nyasa Dasakam. Both are succinct in nature and outline the Doctrine of Surrender ever so crisply. The other two hymns — Nyasa Vimsathi and Nyasa Thilakam — deal with the subject more elaborately and are actually extensions of Nyasa Dasakam.

This Note presents a concise study of Nyasa Dasakam and Adaikkala-Pathu by enlisting their salient features. The addressee of both the works is Lord Varadaraja of Hasthigiri (Kancheepuram). In fact, Swami Desika composed them after performing Prapathi to the Lord of the Hasthi Giri. Thus, it may be said that while the common refrain is 'practise what you preach', Swami Desika went one step ahead and preached what he practised! That is the reason why these works have been drafted into the Thiru Aradhanam or the daily pooja procedure for recitation.

The gist of both the Hymn and Prabandham (Sloka/ Paasuram wise) are given below:

**Nyasa Dasakam:**

1. One who is in the know of things should submit at the Lord's feet: a) his self - called Swaroopa Samarpanam; b) the burden of protecting him - called Bhara Samarpanam and c) the fruits of the protection - called Phala Samarpanam.

2. I am placing the responsibility of protecting me on You as:
   - I am helpless and looking for You to provide me succour - Kaarpanyam;
   - I shall do things that will please You - Aanukoolya Sankalpam;
   - I shall not do things that will displease You - Praathikoolya Varjanam;
   - I have unswerving faith in You - Maha Viswaasam;
   - I explicitly pray to You to protect me - Gopthruthva Varanam."
3. The three kinds of sacrifices one must perform while doing things prescribed in the scriptures, such as Prapathi are: Karthruthva Thyaagam - disclaimer as to the doer of the work, Mamathaa Thyaagam - disclaimer as to the behalf of the work and Phala Thyaagam - disclaimer as to the benefits arising out of the work. This would mean that it is He who does the work on His behalf and for His own benefit.
4. O! Consort of Sri, grantor of desired boons (Abhishta Varada!), I have surrendered to You; Please lead me to Your feet when I am done with this body (after death).
5. Keep me away from doing things that are forbidden and have me forever in Your service.
6 Order me into flawless service to You accompanied by Consorts, divine ornaments and weapons.
7. You accept me and all mine — sentient and insentient — as tools of Your service.
8. I can be protected only by You. You should wipe out my past sins and prevent further sins.
9. Forgive me for the two kinds of sins — things done which ought not to have been done (sins of commission) and things omitted to be done which ought to have been done (sins of omission).
10. Lord Varada Himself has, on His own accord, fulfilled my Bhara Nyasam with the five imperative components, at His feet. Hence, I have become relieved of any concern/responsibility whatsoever, in this regard.

**Adaikkala-Pathu:**

1. I surrendered unto the benevolent Lord of Hasthi Giri after having been tired of trying things like the doctrine of devotion.
2. I attained the feet of the Lord, knowing full well that the benefit from those like Brahma and Siva are subject to the results of Karma and hence not permanent.
3. I know the glory of none else than the Lord of Hasthigiri who showers His grace on all who surrender unto Him.
4. I attained the feet of the Lord who granted the desired material benefits as well as Moksha to the likes of Kaakaasura, Vibheeshana, Draupadhi, Kshathrabandhu, Gajendra, Kaalinga, Siva and Brahma.
5. I took refuge in the Lord of Thiru-Kachchi after observing the Five Essential Elements of Prapathi (as in Sloka No. 2 of Nyasa Dasakam above).
6. I placed myself before Lord Varada who is the saviour of those who performed Saranaagathi through one of the four methods — Swanishta (self-surrender), Ukthi Nishta (performing Prapathi by uttering the words of one's Acharya), Acharya Nishta (included in the Prapathi done by one's Acharya), Bhagavatha Nishta (included in the Prapathi done by a fully competent Bhagavatha).
7. I attained the feet of Perarulaalan who, with His Abhaya Mudhra, appears to tell that It is enough to perform Prapathi just once.
8. I shall never forget the words of Lord Arulaala (like the Saasthras, Charama Sloka, etc.).
9. I worshipped the feet of the Lord after getting rid of ignorance and obtaining clarity through the great works of the Azhwars and Acharyas that are the essence of the Vedas and Saasthras.
10 I drowned into the feet of kind Varada who is always with His Consort, has an exquisite form, ever merciful, epitome of knowledge, easy to access, omni-present, the Lord of the universe, performer of creation-protection-destruction.
11. Bhagavathas are those who held Lord Arulaala as the means as well as the end. The Prapathi has to be done only once while the fruits are permanent.

The very fact that Swami Desika has composed two works on similar lines speaks volumes of the import of Saranaagathi. Let us follow the footsteps of the great Acharya.

***(to be continued…)***

ஸ்ரீ:




# *With Pranams:*

**Priya & T.R. Murali,**
1 - 606, Brigade Metropolis,
Whitefield Main Road, Mahadevapuram,
Bengaluru 560 048.

**SVDD thanks Smt. Priya & Sri T.R. Murali**
for sponsoring this month's issue of Desika Sandesam





ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீபாதம் கைங்கர்ய அஸோஸியேஷன் பரிசளிப்பு விழா





வைகுண்ட ஏகாதசி கருட ஸேவை